108
செந்தமிழறிஞர்கள்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

இலட்சுமி

ISBN : 978-81-687682-2-2

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

அண்ணா நூற்றாண்டு நூலகம்
ANNA CENTENARY LIBRARY
DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/114.%20%E0%AE%B2%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AE%E0%AE%BF_1921

செந்தமிழ்சிற்பிகள்

லட்சுமி (1921 - 1987)

அறிமுகம்

தமிழகத்தின் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களில் ஒருவர். சமூகச் சிறுகதைகள், புதினங்கள் பெருமளவு எழுதியவர்.

வாழ்க்கைக் குறிப்பு

லக்ஷ்மி திருச்சி மாவட்டம் தொட்டியம் என்ற ஊரில் பிறந்தவர். இவருடைய தந்தையார் மருத்துவர் சீனிவாசன். தாயார் பட்டம்மாள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் திரிபுரசுந்தரி. மருத்துவராகவும் தமிழ் இலக்கிய உலகில் தனி இடம் பெற்ற எழுத்தாளராகவும் திகழ்ந்த இவர் தமிழகம் மட்டுமின்றி தென்னாப்பிரிக்காவிலும் பல ஆண்டுகள் வாழ்ந்தவர்.

இளமைப் பருவம்

பாட்டன் பாட்டியிடம் வளர்ந்த இளமைப் பருவத்தில் பாட்டியிடம் நிறைய அனுபவப் பாடங்களைக் கேட்டு வளர்ந்ததில் இவருடைய சிந்தனைப் போக்கு ஒத்த வயதுடைய மற்ற குழந்தைகளை விட மாறுபட்டதாகவே இருந்தது. தொட்டியத்தில் ஆரம்பக் கல்வி கற்று, முசிறியில் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியில் தனிப் பெண்பிள்ளையாக உயர்கல்வி கற்றார். திருச்சியில் ஹோலிக்ராஸ் கல்லூரியில் புகுமுக வகுப்பு என்று முடித்து சென்னை ஸ்டான்லி கல்லூரியில் மருத்துவப் படிப்பில் நுழையும் வரை திரிபுரசுந்தரிக்கு பொருளாதாரப் பிரச்னை அ வ்வளவாகப் பாதிக்கவில்லை.

எழுத்தாளராக

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருந்த காலத்தில் இரண்டாம் உலகப் போர் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதாரப் பின்னடைவு திரிபுரசுந்தரியின் குடும்பத்தில் தீவிரமாகவே பாதிப்பினை ஏற்படுத்தியது. தந்தையார் சீனிவாசன் தன் மகளிடம் படிப்பு தொடர்வதற்குப் பண உதவி செய்ய இயலாமையை விளக்கி அவரை ஊருக்குத் திரும்பும் படி வலியுறுத்தினார்.

ஆனால் திரிபுர சுந்தரிக்கு தன் படிப்பினைப் பாதியில் விட மனமில்லை . ஏதோ துணிவில் ஆனந்த விகடன் நிர்வாக ஆசிரியர் வாசனைச் சந்தித்து தன் நிலைமையை விளக்கி தன் படிப்பு தொடர உதவும் படி வேண்டினார். அவர் எழுதித் தரும் கதைகளை ஆனந்த விகடன் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டு பண உதவி செய்வதாக வாசன் தந்த உறுதிமொழியில் ஊக்கம் அடைந்தவராக தன் முதல் சிறுகதையான “தகுந்த தண்டனையா?” என்கிற சிறுகதையை எழுதி விகடனுக்குத் தந்து தன் எழுத்துலகப் பயணத்தைத் தொடங்கினார்.

விகடனும் லக்ஷ்மியும்

கல்லூரி மாணவியாக இருந்ததாலும் சக மாணவர்களின் கேலியைத் தவிர்க்க எண்ணியதாலும் லக்ஷ்மி என்கிற புனைபெயரிலேயே எழுத ஆரம்பித்த திரிபுரசுந்தரி தன் படிப்பு முடியும் முன்பாகவே தொடர்கதைகள் வரை எழுத ஆரம்பித்தார். இவருடைய படிப்பு தொடரவேண்டும் என்பதற்காக வாசன் அளித்த ஆதரவு மிகவும் உயரியது. மாதத்திற்கு மூன்று சிறுகதைகள் மூலம் (அவை வெளி வந்தாலும் வராவிட்டாலும்) இவருக்குப் பணம் கிடைக்கும் வண்ணம்

பார்த்துக் கொண்டார் அவர். தொடர்ந்து பணம் கிடைக்கும் வசதிக்காகத் தான் தொடர்கதையே எழுதினார் லக்ஷ்மி. இவருடைய முதல் தொடர்கதை "பவானி". இவருடைய சிறுகதைகள் குடும்பப் பாங்குடனும், ஆபாசம் ஒருசிறிதும் இன்றியும், பெண்களின் பிரச்னைகளை மையப்படுத்தியும் இருந்ததால் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இவருக்குக் கிடைத்தது.

படிப்பு முடியும் முன்பே "பெண்மனம்" என்கிற இன்னொரு நாவலும் எழுதி அதில் கிடைத்த பணத்தைத் தன் இளைய சகோதரியின் திருமணத்துக்குக் கொடுத்து தன் குடும்பத்துக்கும் உதவிகரமாக விளங்கினார் லக்ஷ்மி.

படைப்புகளும் விருதுகளும்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள், சுமார் நூற்று ஐம்பது நாவல்கள் , ஐந்து கட்டுரைத் தொகுப்புகள், ஆறு மருத்துவ நூல்கள் இவர் எழுதிய வையாகும். தமிழக அரசின் பரிசு உள்பட ஏராளமான இலக்கிய அமைப்புகளின் பரிசுகளையும் விருதுகளையும் வாங்கிக் குவித்த இவருடைய "ஒரு காவிரியைப் போல" என்கிற நாவல் சாகித்ய அகாதமி விருதினை வென்றது.

(😊)(😊) @@@@@@@@@@@@@@ (😊)(😊)

லக்ஷ்மி வாழ்க்கையிலும் எழுத்திலும் மருத்துவரே!

https://www.sirukathaigal.com/%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BF/

சமூக முன்னேற்றத்துக்காகச் சிறுகதைகள், புதினங்கள் எழுதிய சிறந்த எழுத்தாளர்களுள் "லக்ஷ்மி' இன்றும் விவாதமின்றிப் பேசப்படுபவர். வார, மாத இதழ்களில் குறிப்பாக அதிகம் விற்பனையாகும் இதழாசிரியர்கள்

போட்டி போட்டுக்கொண்டு "லக்ஷ்மி'யின் நாவல்களையும் சிறுகதைகளையும் வெளியிட்டனர்.

திருச்சி மாவட்டம் 'தொட்டியம்' என்ற சிற்றூரில், 'லக்ஷ்மி' என்னும் புனைபெயர் கொண்ட திரிபுரசுந்தரி, 1921-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி சீனிவாசன்-பட்டம்மாள் தம்பதிக்குப் பிறந்தார்.

தொட்டியத்தில் தொடக்கக் கல்வி, முசிறியில் மேல்நிலைக் கல்வி முடித்து, திருச்சி கல்லூரியில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். சிறுவயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்ற கனவு திரிபுரசுந்தரிக்கு இருந்தது. டாக்டர் படிப்புக்காகச் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அப்போதுதான் எழுத்தாளரானார்.

டாக்டர் திரிபுரசுந்தரி எழுத்தாளர் "லக்ஷ்மி' ஆவதற்கு அவருடைய தந்தையின் கடிதமொன்றும் காரணம். மருத்துவம் படித்து முடித்துப் பட்டம் பெறுவதற்குள் இவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகள், துன்ப-துயரங்கள் ஏராளம். தந்தை சீனிவாசனின் கடிதம் தமிழ்நாட்டுக்குச் சிறந்த ஓர் எழுத்தாளரை அளித்தது. ""இனி செலவுகளைச் சமாளித்து உன்னைப் படிக்க வைக்க முடியாது; அதற்குத் தேவையான பொருளாதாரம் என்னிடம் தற்சமயமில்லை. வீட்டையும் பொறுப்பாக நிர்வகிக்க வேண்டும் என்பதால் முப்பது ரூபாய்க்கு மேல் அனுப்ப முடியாது. எனவே, உடனே நீ புறப்பட்டு வந்து விடு. என்னால் சமாளிக்க முடியும் என்ற நிலை வரும்போது உன்னைத் தொடர்ந்து படிக்க வைக்கிறேன். அதுவரை படிப்பை நிறுத்தி வைக்கவும்" என்று தந்தை எழுதிய கடிதம் அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது.

திரிபுரசுந்தரி திகைத்தார். மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைப்பது அவ்வளவு எளிதன்று. நிறுத்திவிட்டால் மீண்டும் இடம் கிடைக்குமா? கிடைத்தாலும், அப்பாவுக்குப் படிப்பைத் தொடர அனுப்பும் எண்ணம் அப்போது இருக்குமா? என்று பலவிதச் சிந்தனைகளும், குழப்பங்களும் சூழ்ந்தபோது, பழைய அமெரிக்கச் செய்தித்தாள் ஒன்று அவர் கண்ணில் பட்டது.

அதில், அமெரிக்க மருத்துவக் கல்லூரி மாணவரைப் பற்றிய மிகவும் சுவையான கட்டுரை ஒன்று வெளியாகியிருந்தது. தன் படிப்பை மேற்கொண்டு தொடர, பொருளாதார வசதி இல்லாமல் அந்த மாணவர்

சிரமப்பட்டார். அதற்காக அவர் தளர்ந்துவிடவில்லை. மனம் துவண்டுவிடவில்லை. ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கிப் பணம் தேட முற்பட்டார். காய்கறிகளை ஏற்றிச் செல்லும் லாரியை ஓட்டினார். அதில் கிடைத்த வருமானத்தில் படிப்பதற்குத் தேவையான நூல்களை வாங்கினார்; படிப்பைத் தொடர்ந்தார்; பட்டம் பெற்றார். பின்னர் அறுவை சிகிச்சையில் நிபுணரானார். இதைப் படித்த திரிபுரசுந்தரியின் உள்ளத்தில் சக்தி ஒன்று பிறந்தது.

'நாமும் ஓய்வுநேர வேலையாக ஏதாவதொன்றை ஏன் தேடிக்கொள்ளக்கூடாது' என்னும் கேள்வி எழுந்தது. நாள்தோறும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இருந்து பிராட்வே வழியாகப் (டிராம் வண்டியில்) பயணிக்கும்போது ஒவ்வொரு நாளும் டிராம் வண்டி நிற்குமிடத்தில் 'ஆனந்த விகடன்' அலுவலகப் பெயர்ப் பலகையை திரிபுரசுந்தரி காண்பது வழக்கம். திரிபுரசுந்தரி வாராவாரம் விரும்பிப் படிக்கும் இதழ் அது. அந்த இதழின் நிர்வாக ஆசிரியர் எஸ்.எஸ்.வாசனைச் சந்தித்து, "தன் மருத்துவ மேல் படிப்புக்கு உதவி கேட்டால் என்ன?" என்ற எண்ணம் தோன்றியது.

கதைகளை வெளியிட்டுத் தன் மருத்துவப் படிப்புக்கு உதவ வேண்டும் என்று கேட்க, ஆனந்த விகடன் இதழின் நிர்வாக ஆசிரியர் எஸ்.எஸ்.வாசனை சந்திக்க விரும்பினார். திரிபுரசுந்தரியின் அதிர்ஷ்டம், எந்தவித இடையூறுமின்றி வாசனைச் சந்திக்க முடிந்தது. தன் நிலையை உருக்கமாக அவரிடம் கூறினார். மறுநாளே கதை எழுதிக்கொண்டு வருமாறு வாசன் சொன்னார்.

இரவு முழுவதும் கண் விழித்து "தகுந்த தண்டனையா? என்ற தலைப்பில் சிறுகதை ஒன்றை எழுதினார். வாசனிடம் அளித்தார். "லக்ஷ்மி' என்ற புனைபெயரிட்டுக் கொண்டார். பொறுப்பாசிரியராக இருந்த கல்கியைச் சந்தித்துத் தன் முதல் கதையை அவரிடம் கொடுத்தார்.

"உங்கள் கதையைப் படித்தேன்; மிகவும் நன்றாக இருக்கிறது. அடுத்த வாரம் ஆனந்த விகடனில் வெளியிடப்படும்" என்று கல்கி தம் கைப்படவே கடிதம் எழுதியிருந்தார்.

கதை பிரசுரமானது. ஏழு ரூபாய் சன்மானம் கிடைத்தது. அந்தப் பணத்தில் கதை எழுதுவதற்குத் தேவையான காகிதமும், பேனாவும் வாங்கினார்.

அந்தப் பேனாவைப் பெரும் பொக்கிஷமாகக் கருதிப் பல ஆண்டுகள் வைத்திருந்தார்.

அடுத்து ஓர் இன்ப அதிர்ச்சி. மாணவியான லக்ஷ்மிக்கு உதவ, தொடர்ந்து இரண்டு, மூன்று கதைகளை வெளியிட முடிவெடுத்து, கதை ஒன்றுக்குப் பத்து ரூபாய் அளிக்கத் தீர்மானித்துள்ளதாகக் கல்கி சொன்னார். அதைக் கேட்டு, லக்ஷ்மி தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வெளியிட வார்த்தைகளின்றித் தவித்தார். லக்ஷ்மி என்னும் புனைபெயருடன் சிறுகதை எழுத்தாளராகத் தன் எழுத்துப் பயணத்தைத் தொடங்கினார். அடுத்தும் ஓர் இன்ப அதிர்ச்சி. "பவானி' என்னும் சிறு தொடர் எழுதுமாறு ஆனந்த விகடனில் வாய்ப்புக்கிடைத்தது. அதற்கு ஐநூறு ரூபாய் அன்பளிப்புத் தருவதாக வாசன் கூறினார்.

பவானியைத் தொடர்ந்து பல சமூக நாவல்களைத் தொடராக எழுதினார். அரக்கு மாளிகை, காஞ்சனையின் கனவு, போன்ற கதைகளின் கரு, லட்சியம், சமூகச் சூழலின் பிரதிபலிப்பு வாசகர்களைக் கவர்ந்தன.

அவருடைய வரலாற்றை ஒரு வார இதழ், "கதாசிரியையின் கதை' என்னும் தொடராக வெளியிட்டது. லக்ஷ்மியாய் வாசகர்களிடையே அறிமுகமாகி பெயரும், புகழும் பெற்ற டாக்டர் திரிபுரசுந்தரியின் வாழ்க்கையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. டாக்டர் படிப்பை முடிப்பதற்குள் பண நெருக்கடிகளை வென்றார்.

ஜாதி மதங்களைப் பாராத வாழ்க்கை நெறியைப் பற்றி சிறுகதைகளிலும், நாவல்களிலும் எழுதிவந்த அவர், காதல் என்ற புனிதச் சொல்லுக்குக் களங்கம் ஏற்படாது காத்து வந்தார். காதலை ஒரு காவியமாக நினைத்தார்.

டாக்டர் திரிபுரசுந்தரி "தாய்மை' என்ற நூலை எழுதினார். அந்த நூலுக்குச் சிறந்த மருத்துவ நூலுக்கான விருது கிடைத்தது. அந்தப் பரிசைப் பெற இலங்கையில் நடந்த தமிழ் மாநாட்டுக்குச் சென்றபோது, தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருந்த "கண்ணபிரான்' என்ற இளைஞரைச் சந்தித்தார். இருவரும் காதல் வயப்பட்டனர். பதிவுத் திருமணமும் (கலப்புத் திருமணம்)

செய்துகொண்டனர். இவர்களின் ஒரே ஆண் வாரிசு மகேஸ்வரன்.

லக்ஷ்மியின் "ஒரு காவிரியைப் போல' என்னும் நாவலை "சாகித்ய அகாதெமி' விருதுக்குப் பரிந்துரைத்துப் பரிசு கிடைக்குமாறு செய்தவர் நா.பார்த்தசாரதி.

பவானியில் தொடங்கி ஏறத்தாழ 150 புதினங்களும், எட்டுச் சிறுகதைத் தொகுதிகளும் எழுதியுள்ளார். "கதாசிரியையின் கதை' என்னும் தலைப்பில் தன் வரலாறு உள்பட ஐந்து கட்டுரைத் தொடர்களும், "தாய்மை' உள்பட ஆறு மருத்துவ நூல்களும் எழுதியுள்ளார்.

1987-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் தேதி லக்ஷ்மி, தமிழர்களையும் நண்பர்களையும் எழுத்தையும் விட்டுப் பிரிந்தார்.

மருத்துவராக வேண்டும் என்று இளம் வயதிலேயே லட்சியம் கொண்டு அதை நிறைவேற்றிய இவர், எழுத்தையும் மருத்துவராகக் கருதினார். அதனால்தானோ என்னவோ, இவரைப் பற்றிய ஆய்வு நூல் எழுதிய பேராசிரியை கலா தாக்கர் "எழுத்தும் ஒரு வகை மருத்துவமே' என்று பொருத்தமாகத் தலைப்பிட்டுப் பயனுள்ள நூலொன்றை 1998-ஆம் ஆண்டு படைத்துள்ளார்.

– கலைமாமணி விக்கிரமன், தினமணி, செப்டம்பர் 18, 2011

படைப்புகள்

ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள், சுமார் நூற்று ஐம்பது நெடுங்கதைகள், ஐந்து கட்டுரைத் தொகுப்புகள், ஆறு மருத்துவ நூல்கள் இவர் எழுதியவையாகும்.

நெடுங்கதைகள்

- அம்மா வருவாளா; 1998; இதயம் பேசுகிறது இதழில் வெளிவந்த தொடர்
- அழகு
- இரண்டாவது மலர் (இறுதியாய் எழுதிய தொடர்)
- என்பெயர் டி.ஜி.கார்த்திக் (மாலைமதி)
- ஒரு காவிரியைப் போல
- மண்குதிரை
- நல்லதோர் வீணை
- வானம்பாடிக்கு ஒரு விலங்கு
- விடிவெள்ளி

தமிழக அரசின் பரிசு உள்பட ஏராளமான இலக்கிய அமைப்புகளின் பரிசுகளையும் விருதுகளையும் வாங்கிக் குவித்த இவருடைய "ஒரு காவிரியைப் போல" என்கிற நாவல் சாகித்ய அகாதமி விருதினை வென்றது.

"ஒரு காவிரியைப் போல' என்பது தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற ஒரு குடும்ப நாவலாகும். தலைசிறந்த பெண் எழுத்தாளர்களில் ஒருவரான **லக்ஷ்மி** (Lakshmi) இந்நூலை எழுதியுள்ளார்.

நாவலின் சிறப்பம்சங்கள்:

- **கதைக்களம்:** தன் சொந்த ஊரான ஆப்பிரிக்காவில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து, அங்கிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் 'காவேரி' என்ற பெண்ணின் வாழ்க்கைப் போராட்டமே இந்நாவலின் மையக்கரு.
- **கதாபாத்திரம்:** தமிழ்நாட்டை அடைந்த பிறகு அவள் எதிர்கொள்ளும் குடும்பச் சிக்கல்கள், அவளது பொறுமை மற்றும் உறுதியான குணத்தை நாவல் மிக அழகாகச் சித்தரிக்கிறது.
- **ஆசிரியர்:** லக்ஷ்மி, பெண்களின் உளவியல் மற்றும் குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டு எழுதிய மிகச் சிறந்த நாவல்களில் இதுவும் ஒன்று.
-

இந்நூல் தமிழ் இலக்கியத்தில் பலரால் போற்றப்படும் ஒரு குடும்ப நாவலாக நிலைபெற்றுள்ளது. நீங்கள் இந்த நாவலை வாங்க விரும்பினால், CommonFolks அல்லது Panuval போன்ற இணையதளங்கள் வழியாகப் பெறலாம்.இந்நாவலைப் பற்றிய கூடுதல் தகவல்கள் அல்லது சுருக்கம் தேவைப்பட்டால் கூறவும்!

ஒரு காவிரியைப் போல...

லக்ஷ்மி!

https://medium.com/@gayuraga/%E0%AE%92%E0%AE%B0%E0%AF%81-%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D-%E0%AE%AA%E0%AF%8B%E0%AE%B2-

%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%AE%AE%E0%AE%BF-5878865d314d



(சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல்)

(ஒரு காவிரியைப் போல...)யாருமே இருக்கக்கூடாது!"ஆரியா" படத்தில் வரும் "Snake பாபு" கேட்பதைப் போல,"என்கிட்ட இருக்க எதுடா உன்ன heavy ஆ like பண்ண வெச்சுச்சு?!" என்று தான் இந்த புத்தகத்திற்கு 1985 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருது வழங்கிய குழுவை நோக்கி கேட்க வேண்டும் என்று தோன்றியது😅🙄 எந்த கோணத்துல பாத்தாலும் இந்த விருதுக்கு சுத்தமா இந்த book worth இல்ல!சென்ற மாதம் வாசித்த "காஷ்மீர் கத்தி" கூட ஒரு வகையில் நல்ல படைப்பு என்று

கொள்ளலாம்.ஆனா,இதுல விருது வழங்குற அளவுலா ஒன்னும் இல்ல😞

என் அப்பா அடிக்கடி தான் பள்ளிநாட்களில் தேர்வில் கட்டுரைக்கு விடையளித்த விதத்தை சொல்வார்.அதாவது,"வாழை மரம்" பற்றிய கட்டுரையை நன்றாக உரு ஏற்றி சென்றிருந்த நிலையில் "பசு" என்ற தலைப்பை வினாத்தாளில் கண்டதும் கலங்காமல்,வாழை மரம் பற்றி தான் மனனம் செய்து வைத்திருந்த அத்தனையையும் எழுதி,"இப்படிப்பட்ட வாழை மரத்தில் தான் அந்த பசு கட்டப்பட்டிருந்தது." என்பதாக முடித்ததாக சொல்வார்😂அதைப் போல,இப்புத்தகத்தின் தலைப்புக்கு எப்படியாவது ஒரு விளக்கம் தரவேண்டும் என்பதைப் போல சற்றும் சம்பந்தமே இல்லாத ஒரு முடிவு!

என்னதான் தமிழ் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அயல் தேசத்தின் பெண்ணாக,நல்ல வேலையில் உள்ளவளாக,தனித்து சில விஷயங்களை செய்யும் ஒருத்தியாக என்ற ரீதியில் தொடங்கினாலும்,முழுக்க முழுக்க காவேரி ஒரு தமிழ் சமூகம் சொல்லும் "நல்ல பெண்" என்னும் அடையாளத்தில் அடங்கிப் போகிறாள்!(சத்தியமா எத சொல்லி பொலம்புறதுனு தெரியல!அந்த அளவுக்கு ஒரு வலுவற்ற,மகா பலவீனமான,"லூசா இது?" என்று பல இடங்களில் எரிச்சலை உண்டாக்கும் தலைப்பு கதாபாத்திரம்!)

80களில் ஆப்பிரிக்காவில் கூட்டுக் குடும்பம்(இது சற்று உறுத்தலாகவே இருந்தது.ஏனெனில்,நான் கூடவே வாசித்துக் கொண்டிருக்கும் "Half of the Yellow Sun" என்னும் நாவலில் 60களின் ஆப்பிரிக்க வாழ்வை பார்க்கிறேன்.அங்கு,சொந்த தாய் தகப்பனையே அவ்வப்பொழுது தான் சந்தித்துக் கொள்கிறார்கள்.அப்படியிருக்க இங்கு 80களில் கூட்டுக் குடும்பம் எப்படி என்ற கேள்வி வந்தாலும்,சரி தமிழ் கலாச்சாரத்தை

பாதுகாக்கிறார்கள் என்று நானே சமாதானம் செய்து கொண்டேன்!ஆனாலும்,நூலின் பெரும்பகுதியில் அந்நாட்டின் வழக்கங்களை அங்குள்ள நம் தமிழர்களும் பழகிக் கொண்டதை மெச்சி தள்ளும் எழுத்தில்,இந்த கூட்டுக் குடும்ப அமைப்பு மட்டும் எப்படி தொடர்ந்தது என்பதற்கான விளக்கமில்லை.ஒரு வேளை,அது நல்ல பழக்கம் என்று அதை மட்டும் தொடர்ந்தார்களோ?🤔),வெளிநாட்டில் இருக்கும் எந்த நியாயமான பழக்க வழக்கங்களும் தங்களை பாதிக்காதது போல கணவன் சொல் தட்டாமல் வாழும் பெண்கள்!யசோதா கதாபாத்திரம் மோசமான அண்ணி என்பது உண்மையே!ஆனால்,அவள் வார இறுதிகளில் window shopping செய்து பொழுதை கழிப்பது,கணவனுடன் திரைப்படம் காண்பது,ஞாயிறு காலை நிதானமாக எழுவது எல்லாம் கூட அவளின் கெட்ட குணங்கள் என்பதைப் போல எழுதியுள்ளது “இது அக்காலத்திற்கான எழுத்து!” என்பதை பட்டவர்த்தனமாக அறிவிக்கிறது!

பிறந்ததுமே அம்மாவை இழந்த காவேரி அண்ணியின் அரவணைப்பிலேயே வளர்கிறாள்.அண்ணனின் இழப்பு,அண்ணியின் மரணம்,காதலில் ஏமாற்றம்,சிறிய அண்ணனின் இரக்கமற்ற புறக்கணிப்பு,சிறிய அண்ணியின் சொத்தை அபகரித்த வஞ்சகம் என நீளும் serial ரக துன்பங்கள் தாளாமல்,பெரிய அண்ணியின் கடைசி ஆசை படி அவரது உடுப்புகளை அவர் பிறந்து,வளர்ந்து,விளையாடிய காவிரி தீரத்தில் விடும் எண்ணத்திலும்,தன் மீது தொடக்கம் முதலே அன்பு செலுத்தி வரும் தாமோதரன் மீது காதல்,சந்தேகம்,வருத்தம்,கோபம்,மனத்தாங்கல் என்ற பல காரணங்களாலும் இனி பிறந்தகம் திரும்புவதில்லை தாய் நாட்டிலேயே வேலை செய்து கொண்டோ ஆசிரமத்திலோ வாழ்வது என்ற முடிவுடன் ஆறு மாத கால விடுப்பில் இந்தியா வருகிறாள்.இங்கு அண்ணியின் சொந்தங்கள் பணத்தாசை பிடித்து இவளின் காசை கறப்பது,அவர்களின் பிடியில் தப்பி சென்னையின்

ஆசிரமத்தில் தங்குவது,அங்கும் பாலியல் தொல்லைகள் நிகழ்வது,பின் அங்கிருந்து வேறொரு தெரிந்தவர் இல்லம் சேர்வது,அங்கும் இவளை அடைய தொடரும் தொல்லைகள்,அங்கிருந்து தப்பி பெண்கள் விடுதியில் வாசம்,மிக மிக குறைந்த சம்பளத்தில் ஒரு வேலை,பாஸ்போர்ட் முதல் கொண்டு அனைத்தையும் வைத்துக் கொண்டு தர மறுக்கும் விடுதி உரிமையாளர்...அப்பப்பா...போதும்டா சாமீ🙏🙏🙏

காவேரி இந்தியா வரும் வரை,"சரி முதன்மை கதாபாத்திரத்தை சற்று வலுவில்லாதது போல வடிவமைத்திருந்தாலும் ஒரு சராசரிப் பெண்ணின் மெய்யான மனவோட்டங்களையும் குழப்பங்களையும் தடுமாற்றங்களையும் சங்கடங்களையும் சோகங்களையும் எழுதியிருப்பதால் கொஞ்சம் நிஜத்தன்மை உள்ளது!" என்று பொறுத்துக்கொண்டு வாசிக்க முடிந்தது.ஆனால்,இந்தியா வந்த பின் வரும் அனைத்து நிகழ்வுகளும் அவள் நொடிக்கொரு தடவை தான் பிறந்த நாட்டையும் தாய் நாட்டையும் ஒப்பிட்டு இந்திய தேசத்தை குறை சொல்லிக்கொண்டே இருப்பதும்(ஆமாம்,அந்த இடத்தில் யார் இருந்தாலும் இதைத் தான் செய்வார்கள்.ஆனால்,ஒரு கட்டத்துக்கு மேல் அது கோபத்தையே கிளறுகிறது!)இங்கு அவள் வரிசையாக சந்திக்கும் அனைத்து ஆண்களும் கூட அவளை அடையும் நோக்கத்திலோ அல்லது தங்களின் லாபத்திற்காக ஏமாற்றும் மனிதர்களாகவுமே இருப்பது(இதுவும்,ஒரு வகையில் ஒப்புக்கொள்ள வேண்டியதே!இன்னமும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டில் நடத்தப்படும் விதங்களின் அநியாயங்களை செய்திகளில் பார்த்து தான் வருகிறோம்.ஆனால்,இதுவும் வெறுப்பையும் சலிப்பையுமே தருகிறது!)

"அப்போ அவ்ளோ கஷ்டம்னா உங்க நாட்டுக்கே போக வேண்டியது தான?!ஏன் கொஞ்சம் கூட இத்தனை அவஸ்தைகளுக்கு worth இல்லாத ஒரு வீண் வீம்புக்காக இங்கயே கெடந்து அல்லாடணும்?!" என்று தான் கேட்க வைக்கிறது.

ஆமாம்,ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல இந்தியாவின் நல்ல மனிதர்களும் கூட இப்புத்தகத்தில் வருகிறார்கள்.ஆனால்,அது புத்தகத்தின் இறுதியில் மிகச் சொற்பமான பக்கங்களிலேயே அடங்கி விடுவதால் சரிசமமான வாதமாக அமையாமல் போய் விடுகிறது.அதுவும் இறுதியில் கொஞ்சம் கூட சம்பந்தமேயில்லாமல்,ஒரு குடும்ப நாவல் போல சென்று கொண்டிருந்த புத்தகத்தில்,திடீரென காந்தி,போராட்டம்,அரசியல்,கம்யூனிசம் எல்லாம் வந்து காவேரியை தில்லையாடி வள்ளியம்மைக்கு நிகராக காலம் போற்றும் என்ற ரீதியில் முடிகிறது.குறைந்தபட்சம்,இந்த காட்சிக்கு முன்பு வரும் சில காட்சிகளிலாவது அவளை ஒரு திடமான பெண்ணாக காட்டியிருக்கலாம்.அதற்கு முன்பு வரை கூட வீட்டில் நடக்கும் கணவனின் அரசியல் கூட்டத்தில் கருத்துகள் கூட சொல்லாமல் காபி supply செய்து கொண்டிருந்தவள் தடாலடியாக தில்லையாடி வள்ளியம்மைக்கு நிகர் ஆவதெல்லாம்🤷‍♀️😐

“ஒன்னும் சொல்றதுக்கு இல்ல!” என்ற போதிலும்,என் கவனம் ஈர்த்த சில...எழுத்தாளர் ஒரு மருத்துவர் என்பது பதிப்புரையின் மூலம் நான் தெரிந்து கொண்ட விஷயம்!அதற்கேற்ப சில medical terms கதையில் வருகிறது.கதாநாயகியும் ஒரு செவிலியர் என்பது குறிப்பிடத்தக்கது.இறுதிவரை கதாநாயகி அல்லது பொதுவாக யாருடைய தோற்றத்தை பற்றியும் விரிவான விவரணைகள் இல்லை.பாதி புத்தகத்திற்கு மேல் ஒரு இடத்தில் காவேரி செய்து கொள்ளும் சிறு ஒப்பனையைப் பற்றி வாசிக்கும் பொழுது தான்,”அட!இவள் எப்படி இருப்பாள் என்று விரிவாக இது வரை எங்குமே எழுதவில்லையே!” என்ற வியப்பு எழுந்தது(80களில் மஸ்காரா பற்றி எழுதியிருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது!)ஆப்பிரிக்காவில் நீண்ட நாட்கள் தங்கி,சுற்றுப்பயணம் மேற்கொண்டு,குறிப்பெழுதி வைத்து எழுதியதைப் போல(அதுவே உண்மையாகவும் இருக்கலாம்!) அந்த இடங்களின்,தடங்களின் புவியியல் பேசப்பட்டிருந்தது வியப்பாக

இருந்தது.இப்பொழுதானால் Google,chatGPT என பல்வேறு தளங்களில் விஷயங்களை திரட்டலாம்.அக்காலத்தில் இது சற்று கடினமான ஒன்றாகவே இருந்திருக்கும்.

("கோவில் காஞ்சி" போல அங்கும் "Town of Churches" இருப்பது,"The Valley of Thousand Hills","The Garden colony of South Africa","Table Mountain","Robin Island" போன்ற பல இடங்களும் அவற்றின் சிறப்புகளும் கதையின் ஊடாக அளித்திருப்பது மிகச் சிறப்பு!)அங்கங்கே ஆப்பிரிக்க மொழியில் வசனங்கள் இருந்தது நல்ல நிஜத்தன்மையை அளித்தது.அதற்கான அர்த்தத்தை தமிழில் அடைப்புக்குறிக்குள் அளித்திருந்தது பாராட்டவேண்டியதாய் இருந்தது.""Half of the Yellow Sun" இல் கூட இப்படி பொருளை அடைப்புக்குறிக்குள் தந்திருக்கலாமே,இன்னும் கதையுடன் ஒன்றிப்போக முடிந்திருக்குமே!" என்று தோன்றியது.இதில் வரும் வேலையாள் லீனாவும் "Half of the Yellow Sun" Ugwuவும் நம்பகத்தன்மையிலும் அன்பிலும் பல இடங்களில் ஒன்று போல இருந்தார்கள்.ஆப்பிரிக்காவிலேயே ஆப்பிரிக்க தொழிலாளிக்கு இரவு பத்து மணிக்கு மேல் வெளியில் நடமாட passbook அவசியம் என்பதும்,ஆப்ரிக்கரோ இந்தியரோ வெள்ளையர்களை மணத்தல் "Immorality Act" மூலம் தடை செய்யப்பட்டது என்ற விஷயமும்,1948 ஆம் ஆண்டு நடந்த மிக முக்கியமான கறுப்பினத்தவர்களின் அடக்குமுறைக்கு எதிரான கொந்தளிப்பும் அதில் கொலை,கொள்ளை,கற்பழிப்பு என இந்தியர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களும்,அப்பொழுதே கரு கலைப்பு இந்தியாவில் சட்டபூர்வ ஒன்றாக இருந்ததும்,கதை நடக்கும் கால கட்டத்தில் இந்தியாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் இடையிலான அரசு உறவு துண்டிக்கப்பட்டு அந்தந்த தேசத்தில் ஹைக்கமிஷன் அலுவலகம் இல்லாமலிருப்பதும்(இறுதி இரு விஷயங்களின் வரலாற்றையும் தற்போதைய நிலையையும் மேற்கொண்டு விஷயங்கள் அறிந்து கொள்ள எண்ணியிருந்தேன்!தெரிந்து கொள்ள வேண்டும்) போன்ற வரலாறு சார்ந்த குறிப்புகளும்

காணக்கிடைக்கின்றன!அதுபோக,திருவாசக வாழாப்பத்து வரிகள் எல்லாம் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது!

இந்தியாவின் எதிர்மறையான விஷயங்கள் அனைத்தும் மறுக்கமுடியாதைவையே!காதலிப்பது தன் தம்பியே என்றாலும் காவேரியை வேலையிலிருந்து நீக்க செய்யும் அக்கா கதாபாத்திரத்தின் மூலம்,

"என்னதான் தவறு செய்வது ஆணாக இருந்தாலும் பழி பெண்ணுக்கே!" என்ற உண்மையை பேசியது பாராட்டுக்குரியதே.ஆனால்,அதை சொல்லிய விதம் தான் சற்று வெறுப்பை வரவழைப்பதாக உள்ளது."அண்டியாபீசு" புத்தகத்திலும் இதே கருத்து ஒரு இடத்தில் சொல்லப்பட்டாலும் இது போல,"இந்திய ஆண்களே மோசம்!" என்ற பிம்பத்தை அளிக்கவில்லை.

"சாகித்ய அகாடமி" என்ற ஒரு விஷயத்தை வைத்து மட்டும் இப்புத்தகத்தை வாசிக்க எண்ணினால் ஒரு முறைக்கு இரு முறையாவது ஆலோசித்து பின் ஆரம்பியுங்கள்🙏தங்களின் பொன்னான நேரம் வீணாக வேண்டாமே என்ற ஆதங்கத்தில் சொல்கிறேன்!

நூல்கள்

லக்ஷ்மி, நூற்றி ஐம்பது நாவல்கள், எட்டு சிறுகதை தொகுதிகள், ஐந்து கட்டுரை தொகுதிகள் மற்றும் ஆறு மருத்துவ நூல்கள் எழுதியுள்ளார்.

நாவல்கள்

- அசோகமரம் பூக்கவில்லை
- அஞ்சனா புரிந்து கொண்டாள்
- அடுத்த வீடு
- அணைக்க ஒரு கரம் வேண்டும்

- அத்தை
- அதிசய ராகம்
- அந்திக்கால மோகம்
- அம்மா உனக்கு என்ன ஆச்சு?
- அம்மாவுக்கு கல்யாணம்
- அரக்கு மாளிகை
- அவள் ஒரு கரும்பூனை
- அவள் ஒரு தென்றல்
- அவள் தாயாகிறாள்
- அவளுக்கென்று ஒரு இடம்
- அவனும் ராமன்தான்
- அழகின் ஆராதனை
- அழகு என்னும் தெய்வம்
- அனிதாவுக்கு ரொம்ப துணிச்சல்
- இதோ ஓர் இதயம்
- இரண்டு பெண்கள்
- இரண்டாவது அம்மா
- இரண்டாவது மலர்
- இரண்டாவது தேனிலவு
- இருளில் தொலைந்த உண்மை
- இவளா என் மகள்
- இவனும் ஒரு பரசுராமன்
- இன்றும் நாளையும்
- இனிய உணர்வே என்னை கொல்லாதே
- உண்மை ஊமையல்ல
- உயர்வின் குரல்
- உயர்வு
- உயிரே ஓடி வா
- உரிமை உறங்குகிறது
- உனக்கு நான் எனக்கு நீ
- உன்னை விடவா ரம்யா
- உறவுகள் பிரிவதில்லை
- உறவு சொல்லிக் கொண்டு
- ஊர்வசி வந்தாள்
- ஊன்றுகோல்
- எங்கே அவள்
- என் பெயர் டி.ஜி. கார்த்திக்
- என் மனைவி
- என் வீடு
- ஒரு காவிரியைப் போல
- ஒரு சிவப்பு பச்சையாகிறது
- ஒற்றை நட்சத்திரம்
- கங்கையும் வந்தாள்
- கடைசிவரை
- கதவு திறந்தால்
- கணவன் அமைவதெல்லாம்
- கழுத்தில் விழுந்த மாலை

- காஞ்சனையின் கனவு
- காதலின் பிடியில்
- காதலெனும் புயல்
- காலம் முழுவதும் காத்திருப்பேன்
- காளியின் கண்கள்
- காஷ்மீர் கத்தி
- கூண்டுக்கு வெளியே
- கூண்டுக்குள்ளே ஒரு பைங்கிளி
- கூறாமல் சன்னியாசம்
- கைமாறியபோது
- கோடை மேகங்கள்
- கௌதம், உன்னை கோர்ட்டில்
- சசியின் கடிதங்கள்
- சாதாரண மனிதன்
- சீறினாள் சித்ரா
- சுகந்தி என்ன செய்வாள்
- சூரியகாந்தம்
- சொர்க்கத்தின் கதவுகள்
- திரும்பிப் பார்த்தால்
- துணை தேடும்போது
- தேடிக் கொண்டே இருப்பேன்
- தை பிறக்கட்டும்
- தோட்டத்து வீடு
- தொடுவானம் வரையில்
- நதி மூலம்
- நர்மதா ஏன் போகிறாள்
- நல்லதோர் வீணை
- நாயக்கர் மக்கள்
- நிகழ்ந்த கதைகள்
- நியாயங்கள் மாறும் போது
- நிற்க நேரமில்லை
- நீதிக்கு கைகள் நீளம்
- நீலப்புடவை
- பண்ணையார் மகள்
- பவளமல்லி
- பவானி
- பாதையில் கிடந்த ஒரு பனி மலர்
- புதைமணல்
- புலியின் பசி
- புனிதா ஒரு புதிர்
- பூக்குழி
- பெயர் சொல்ல மாட்டேன்
- பெண் மனம்
- பெண்ணின் பரிசு
- பெண்ணுக்கு என்ன வேண்டும்
- மங்களாவின் கணவன்
- மண் குதிரை

- மண்ணும் பெண்ணும்
- மரகதம்
- மருமகள்
- மறுபடியுமா?
- மன்னிப்பின் மறு பக்கம்
- மனம் ஒரு ரங்கராட்டினம்
- மாயமான்
- மாலதி ஓர் அதிர்ச்சி
- மிதிலா விலாஸ்
- மீண்டும் ஒரு சீதை
- மீண்டும் பிறந்தால்
- மீண்டும் பெண்மனம்
- மீண்டும் வசந்தம்
- முருகன் சிரித்தான்
- மேகலா
- மோகத்திரை
- மோகனா மோகனா
- மோகினி வந்தாள்
- ரங்கராட்டினம்
- ராதாவின் திருமணம்
- ராமராஜ்யம்
- ரோஜாவைரம்
- லட்சியவாதி
- வசந்தகால மேகம்
- வசந்திக்கு வந்த ஆசை
- வடக்கே ஒரு சந்திப்பு
- வனிதா
- வானம்பாடிக்கு ஒரு விலங்கு
- வாழ நினைத்தால்
- விடியாத இரவு
- வீணா ஒரு வீணை
- வீரத்தேவன் கோட்டை
- வெளிச்சத்தை தேடி
- வெளிச்சம் வந்தது
- வெள்ளை நிறத்தில் ஒரு பூனை
- வேலி ஓரத்தில் ஒரு மலர்
- ஜெயந்தி வந்தாள்
- ஸ்ரீமதி மைதிலி

சிறுகதைகள்

- அவள் வேதாந்தம்
- இழந்தது யார்?
- எல்லைக் காளியின் கோபம்
- கடந்த வருஷம்
- காதல் காதல் காதல்
- குழந்தைக்காக

- சித்தப்பாவின் சொத்து
- சித்தி
- சுசிலாவின் தீர்மானம்
- தகுந்த தண்டனையா
- தேவகியின் கணவன்
- நல்ல காலம்
- நள்ளிரவில் ஒரு ரயில் நிலையத்தில்
- நியாயங்கள் மாறும்போது
- பாஞ்சாலியின் சபதம்
- முதல் வகுப்பு டிக்கெட்
- ரஞ்சிதத்தின் சஞ்சலம்
- வில் வண்டி
- விசித்திர பெண்கள்

கட்டுரை தொகுதி

- கதாசிரியையின் கதை - பாகம் 1
- கதாசிரியையின் கதை - பாகம் 2
- கையில் அள்ளிய மலர்கள்
- தென்னாப்பிரிக்காவில் பல ஆண்டுகள்

மருத்துவ நூல்கள்

- தாய்மை

லக்ஷ்மி எழுதிய "ஸ்ரீமதி மைதிலி" நாவல்

https://solvanam.com/2020/08/09/%e0%ae%b2%e0%ae%95%e0%af%8d%e0%ae%b7%e0%af%8d%e0%ae%ae%e0%ae%bf-%e0%ae%8e%e0%ae%b4%e0%af%81%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%af-%e0%ae%b8%e0%af%8d%e0%ae%b0%e0%af%80%e0%ae%ae%e0%ae%a4%e0%ae%bf/

குமுதம் இதழில் லக்ஷ்மி எழுதிய தொடர்கதை "ஸ்ரீமதி மைதிலி"
- கோபுலு வரைந்த அழகிய ஓவியங்களுடன்:







ஆசிரியர் சொல்லக் கொண்டிருந்தார். இன்று எதோ சிவிரமாய் போக வேண்டுமாம்" என்றான் வயிறு வலியை பிறந்து.

"உன் புகழாலும் ஆசிரியர் சொல்லுவதாகிறாய்!" என்று விளங்கிய மனம்.

"ஆனால் அதிசியமாய் கூட சிவிரமாக சொல்லி சொல்லக் கொண்டிருக்கிறார்" என்று பதில் அளித்த வயிறு, மெல்ல நன் ஏற்றி கொண்டு மனிதனை ஒன்று கொண்டு தான் பதில் சொல்ல ஆரம்பித்தான். "கிளைவர் கொண்டாடி விரைவாய் போனால் இன்னும் சொல்லி. ஆனால் இன்று போன பாடம் மட்டும் சொல்லுவார் என்று தான் நினைக்கிறேன். ஆனால் சிவிரமாக என்ன விஷயம் என்று விளங்கவில்லை. நேரம் ஏற்கனவே சமயம் இப்பொழுது சரியாக ஆரம்பித்து கொண்டு விட்டேன். மாதவனை குறிப்பாக, சரவணனை, பண்டிகைக்கு அழைப்பு கொண்டு தான் பார்த்தேன். இதோ இன்று போனால் முதலில் அவர்களை வரவேற்கிறேன்" என்று மடமடவென்று உரைத்தான்.

வீட்டுக் காவலன் சுவாமியும் என்னை கூட்டி வந்து வரவேற்க பட்டான் மனிதன். தனியே இருக்கும் ஒரு அறையை எடுத்து அங்கு போகுமாறு கூட அவனை அனுப்பி கொண்டு. அவன் வரவேற்றுக்கும் அவனது இருக்கிறான், உடனிருக்கும் மனிதனிடம் அது. மனிதன், தான் வீட்டு வரவேற்க என்று சொல்லி விட்டு அவர்களை ஒரு ஒருவரும் வந்த கொண்டு விட்டு கொண்டு வரவேற்கிறேன் என்றான், பாவம் சரவணனை அவர் சொல்லி தான் சொல்லுவதை கொண்டு என்று சொல்லி விட்டு தான் ஒரு வரவேற்கிறேன் என்றான் ஒரு சொல்லி கொண்டு வருகிறான்.

"ஏன் கொண்டாடி விட்டு வந்து கூட வரவேற்கும் வரை வரவு விட்டீர். சிவிரம் வரவு வரவேற்க வேண்டுமா? சொல்லி கொண்டு வரவேற்கிறேன்" என்று கூறினான் மனிதன் கொண்டு. சரவணனை அவர் சொல்லி கொண்டு வரவேற்கிறேன் என்று கூறினான் மனிதன். அவர் இருவரும், வீட்டு வரவேற்கிறேன் இருந்த இடத்தில் விருந்து வரவு கொண்டு வரவு வரவேற்கிறேன்.

"வரவு கொண்டாடி விட்டு வந்து கூட வரவேற்கும் வரை வரவு விட்டீர். சிவிரம் வரவு வரவேற்க வேண்டுமா? சொல்லி கொண்டு வரவேற்கிறேன்" என்று கூறினான் மனிதன் கொண்டு. சரவணனை அவர் சொல்லி கொண்டு வரவேற்கிறேன் என்று கூறினான் மனிதன்.

"கொண்டு வரவேற்கிறேன் என்று ஏன் சொல்லி கொண்டு, ஏன்? என் இப்படி எல்லாரும் மாமனிதனை இருக்கிறீர்கள்" என்று கூட்டாளியாக ஒரு கொண்டு கூட்டாளி கொண்டு, ஏதோ அவனிடம் ஏதோ ஒரு தவறு கண்டு கொண்டு கூட்டாளி கொண்டு. அவ் ஒருவனிடம் கூட்டாளி கொண்டு, கூட்டாளி கொண்டு கொண்டு கொண்டு

ஸ்ரீமதி மைதிலி

அத்தியாயம்—1

ஒரு கிராண அறையைப் பத்திரமாகப் பூட்டி, சாவிக் கொத்தை இடையில் சொருகிக் கொண்டு மைதிலி உள்ளே செல்லத் திரும்பினாள்.

"அம்மா! 'லாண்டரி'ப் பையன் சலவை கொண்டு வந்திருக்கிறான்!" என்று குரல் கொடுத்தான் கேட்கக் காரச் சிறுவன் அன்னாமலை.

"மைதிலி! இன்னும் காப்பி தயாராக வில்லையா? எனக்கு அவசரமாக வெளியே போகணும்னு சொன்னேனே?" என்று நீலகண்டனின் கம்பீரமான குரல் மாடி வராந்தாவிலிருந்து எழுந்தது.

"அம்மா குழந்தை, மைதிலி! சமையல் விவரம் ஒன்னுமே சொல்லல்லியே? இந்த வீட்டிலே ஒத்தருக்குப் பிடிச்சது ஒத்தருக்குப் பிடிக்காதே? நீ கொஞ்சம் சொல்லிவிட்டுப் போனா நான் மள மளன்னு என் காரியத்தைக் கவனிப்பேன்" என்று ஹீனஸ்வரத்தில் முனகிய வண்ணம், சமையற்கட்டிலிருந்து வந்தாள் சாம்பு.

"மைதிலி அம்மா! என் சிலேட் பென்ஸில் உடைஞ்சு போச்சு. வேறே புதுசு வேணும், எடுத்துக் கொடு" என்று ஓலமிட்ட வண்ணம் ஓடி வந்த குழந்தை மாதவன் அவள் காலைக் கட்டிக் கொண்டான்.

இவ்வளவும் போதாதுபோல், வாசலில் வந்து நின்ற கறிவேப்பிலைக் கூடைக்காரி, தெருவை இரண்டாக்கி விடுவதுபோல் பெரும் குரலில், "அம்மா! கறிவேப்பிலை, கொத்துமல்லி! அம்மா! அம்மா!" என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தாள்.

"புளி, சீயக்காய் ஒன்றும் போடவில்லை. அம்மா! உங்கொத்தானே!" என்று சமையற்கட்டு ஓரத்து முற்றத்

ஜகஷ்மி

மைதிலி! இது தான் உலகப் போக்கு. இதனை உலகில் யாரும் தெய்வத் அதிசயமான காரியத்தை என்று சொல்லி விடுவிர்கள்" என்று கூறிவிட்டுச் சிரித்தான் மன்னன்.

கடிதத்தை எழுதி முடித்த பின்பு உறையிட்டுத் தபாலில் சேர்க்க வேலையாளிடம் கொடுத்துவிட்டு மைதிலி மறுபடி உள்ளே வந்து மன்னனின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அவன் தன்னிடம் உதவி விடயத்தை முன்கூட்டியே மன்னனிடம் கூறித்தரக் கொண்டு விட்டாள். பின்னே, அவன் புன்னகையுடன், "மைதிலி! உன் மனதிலே இருப்பது எனக்கு நன்றாக விளங்கி விட்டது. என்னுடைய அவாவும் அதுதான். நான் அமைத்தாகப் பதிவினையும் ஸ்ரீகாந்தனையும் உடனே இங்கே வரச் சொல்" என்று உத்தரவிட்டான்.

சிறிது நேரத்தில் அவன் இரு வரும் ஒருவர் பின் ஒருவராக மன்னனின் அறைக்குள் வந்து நின்றனர். அவன் தன் தம்பியின் முகத்தை நிமிர்ந்து பார்த்து மிகவும் தணிவான குரலில், "ஸ்ரீகாந்த! எனக்கு என் குடும்பத்துக்கு உயிரான முகூர்த்தம் நடக்கவிருக்கிறது. அதுவரையாவது நான் இந்த மனச் சாந்தியுடன் இருந்து அந்த வைபவத்தைக் கண்களால் கண்டு களிக்க ஆசைப்படுகிறேன். நீயும் பதிவினையும் இப்படி இருப்பதைக் காண எனக்கு மனச்சாந்தியே போய் விட்டது" என்றான்.

ஸ்ரீகாந்தன் பதில் பேசாது தமக்கை யின் முகத்தை உற்றுப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். அவளோ நாணமும் இரக்கமுமாய் மத்தியில் கண்ணீர் பெருக்கைச் சமாளிக்கும் பிரயத்தம் பதிவினி தன் தலையைத் தாழ்த்திக்கொண்டு நின்றாள்.

"பேசாமல் பொறுமை சகித்தால், நான் விட்டுவிடுகிறேன் என்றாகாதே. தாமரைப் போல் உள்ளே நான் உள்ளபடி பாசத்துடன் வரவேற்கிறாள், உன் எண்ணத்துடன் இந்தப் பெண்ணை உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். வேறு இடமில்லாமல் வந்த பொறாத காலத்திலும் பணவரவுக்கு ஏற்பட்டால், அந்த வேலையை பார்ப்பாய். நீ மனதிற்கு விரும்பி இவளைத் திருப்தி அடைந்து கொண்டு வர முயற்சியாவது நான் உன் பொறுப்பை உனக்கு அடைகிறேன். நீ எனக்குச் செய்ய வேண்டிய கடமையும் அதுதான்" என்றான் மன்னன் சற்று கடுமையாக.

"இல்லை இப்படி உத்தரவு போட்டால் நான் என்ன பதில் சொல்ல முடியும்" என்று ஸ்ரீகாந்தன் சற்று வருத்தமாக விளவினான்.

"கடந்து போனதைப் பார்ப்பது பெருந்தன்மையாக கடந்து செல்ல வேண்டியது உன்போல் படித்தவர்களின் கடமை. நான் எவ்வளவோ கடந்தவை மறந்து ஒன்றாகி, சிறிதாக இருக்கும்போது நீ மட்டும் ஏன் வேற்றுமை பாராட்டுவதைக் காண்பிக்கவில்லை. இன்றோடு என்னால் மறந்து இரண்டு பேரும் சிறிதாக வாழுங்கள்! உங்கள் இருவருக்கும் என் ஆசீர்வாதம்" என்றான் மன்னன்.

"அக்கா!" என்று விம்மிய தம்பாதக்களில் விழுந்து வணங்கி பதிவினையைத் தூக்கி நிறுத்தி, "போகும் உங்களுக்கு துணைக்கு கொண்டு போய் உள்ளே காரியங்களைக் கவனி. போங்கள் சென்று பேரும் இன்பமாக எனக்கு மனம் நிம்மதியாக" என்றான்.

எதிர்பார்த்தவைட்ட மிக விரைவாக அந்த இளம் உயிர் வைகுண்டத்தடைந்தது. பிரிந்து கிடந்த பேரு ஒன்றாய், மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியுடன் சிரிப்பதைக் கண்ட அந்த வைபவம் மிக விமரிசையாக நடந்தது என்று சொல்லவும் வேண்டுமோ!

முற்றும்.

மைதிலியை அடக்கி ஆளும் எல்லாரும் கடைசியில் மைதிலியிடம் உதவி பெறுகிறார்கள்.

எழுத்தாளர் லஷ்மி குறித்து

1. கடுகு தாளிப்பு: எழுத்தாளர் லக்ஷ்மி
2. லக்ஷ்மி – சிலிகான் ஷெல்ஃப்
3. மிதிலா விலாஸ்: படித்தவை ரசித்தவை – 7 | arusuvai
4. Tamilonline – Thendral Tamil Magazine – எழுத்தாளர் – லக்ஷ்மி
5. பசுபதிவுகள்: லக்ஷ்மி -1

லக்ஷ்மியின் நாவல்களில் பெரும்பாலும் கூட்டுக் குடும்ப வாழ்வில் ஏற்படும் குடும்ப உறவுகள் பற்றிய சித்திரிப்பே அதிகம் காணப்படுகிறது. லஷ்மியின் குடும்ப அனுபவமும் தொழிலில் பல்வேறு நபர்களுடன் பழகிய அனுபவமும், அவருடைய நாவல்களில் குடும்ப உறவு நிலை மிகுதியாகச் சித்தரிக்கப்படக் காரணமாக அமையலாம்.

லக்ஷ்மியின் படைப்புக்களில் குடும்ப அமைப்பும் அதில் குடும்பப் பெண்களுக்குத் தரப்படும் முக்கியத்துவமும் மையப்பொருளாக அமைந்துள்ளன. இவரது கதை முடிவு நல்லதொரு குடும்பம் உருவாவதையே கூறுகிறது; நலமாக முடிகிறது. தவறு செய்தவர் மனம் திருந்தி மீண்டும் நல்வாழ்வை மேற்கொள்வதாக அமைகிறது. லஷ்மியின் "ஸ்ரீமதி மதிலி" என்னும் நாவலில் "வீட்டின் மூத்த மருமகளாக வந்து முழுப் பொறுப்பேற்று, குடும்பத்தைச் சீராக நடத்தும் மைதிலி, பொறாமைக்காரர்களில் சூழ்ச்சியில் வீட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டு வறுமையில் வாடிய பிறகு, கணவனின் துணையால் மறுபடியும் வாழ்க்கையில் முன்னேறுவதோடு, தன்னைத் துன்பத்திற்கு உள்ளாக்கிய நாத்தி, ஓரகத்தி முதலியோரின் வாழ்வையும் செழிக்கச் செய்கிறாள். மைதிலியின் மன உறுதியும் இரக்கம் நிறைந்த உள்ளமும் அவளுக்குத் துணை நிற்கின்றன"

பணக்கார வீட்டுப் பெண்ணான பத்மினி படித்தவள். கணவன் வீட்டினர் மதிப்புடன் நடத்துகிறார்கள். ஆயினும் கணவனைத் தன் விருப்பம் போல் ஆட்டி வைக்கின்றாள். கணவரின் குடும்பத்தில் நிலவும் வறுமையும், கணவனின் உடல்நலக் குறைவும் அதன் காரணமாக ஏற்பட்ட குடும்பப் பொறுப்பும் பத்மினி புகுந்த வீட்டாரை வெறுக்கச் செய்கிறது. இந்நிலையிலேயே கணவனை விட்டுவிட்டுப் பத்மினி பிறந்த வீட்டிற்கு

வந்துவிடுகின்றாள். மனைவியின் உண்மைப் பண்புகளை உணர்ந்து கொண்ட கணவன் அவளை வெறுக்கின்றான்.

இவருடைய எழுத்துக்கள் இன்றைய வேறு பல எழுத்துக்களை நோக்க தீமை குறைந்தவை. எந்தக் கட்டத்திலும் கவர்ச்சி என்பது இவருடைய நோக்கமாக இருப்பதில்லை. இளம் உள்ளங்களைத் திரிக்கும்படியான, ஈர்க்கக் கூடியவைகளை இவர் சொல்லவில்லை. அந்தப் போக்கில் இவர் போக வில்லை. சில செய்திகளை இவர் விளக்குவதில்லை.

மற்ற ஆக்கங்கள்

ஸ்ரீமதி மைதிலியைப் பற்றி எழுதும் போதே, மிதிலா விலாஸ் ஞாபகம் வருகிறது. இரண்டுக்கும் அசாத்தியமான ஒற்றுமைகள் பல உண்டு. தர்மாம்பாள் ஸ்ரீமதி மங்களம்; ஈஸ்வரன் நீலகண்டன்; சாம்பு அய்யர் சாமண்ணா என்று பல, அதே மாதிரியான கூட்டுக் குடும்பக் கதை; ஆனால் முக்கியமான வேறுபாடு என்னவென்றால், மிதிலா விலாசில் கிரிஜாவின் பழைய காதல் சஸ்பென்ஸாகக் கடைசியில் தெரியவரும்.

சினிமாவிலும், கிரிக்கெட்டிலும் இரண்டாவது இன்னிங்ஸ் என்று சொல்லுவார்கள். அதுமாதிரி தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்து (1976) மீண்டும் பல பத்திரிகைகளில் எழுதினார். பூக்குழி (கல்கி), அத்தை (குமுதம்),வானம்பாடிக்கு ஒரு விலங்கு (விகடன்), ஒரு காவிரியைப் போல (குங்குமம்), புதை மணல் (சாவி), மங்களாவின் கணவன் (கதிர்) மேலும் நிறைய மாத நாவல்கள்.

“அடுத்த வீடு நாவலைப் பற்றி ஒன்று சொல்லணுமே? கவுண்டர் சமுதாயத்தை சேர்ந்த பெண் வேற்று சாதி பையனைக் காதலிப்பாள். அதற்காக கோவையைச் சேர்ந்த சமூக சேவகி கண்டனம் தெரிவித்து,

வாசனுக்கு எழுதினார். ஆனால், வாசன் கவலைப் படவேண்டாமென்றும் என்று தைரியம் கொடுத்தாரென்றும், நன்றியுடன் சொன்னார்”

தினமணி

லக்ஷ்மியின் “ஒரு காவிரியைப் போல’ என்னும் நாவலை “சாகித்ய அகாதெமி’ விருதுக்குப் பரிந்துரைத்துப் பரிசு கிடைக்குமாறு செய்தவர் நா.பார்த்தசாரதி. லக்ஷ்மியின் எல்லா நாவல்களிலும் தென்படும் ஓம் அம்சத்தைக் குறிப்பிட வேண்டும். பழைய சம்பவங்களை கொணரும் போது ஒரே அத்தியாயத்தில் மொத்தமும் எழுதாமல், விட்டு விட்டு வேறு வேறு அத்தியாயங்களில் பொருத்தமான நிகழ்வுகளுடன் இணைத்து கூறுவது. சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நாவலில், காவேரிக்குக் கராத்தே தெரியும் என்பதை 25-ஆவது அத்தியாயத்தில் விவரிக்கிறார்.

சில தகவல்கள்

திருச்சி மாவட்டம் “தொட்டியம்’ என்ற சிற்றூரில், “லக்ஷ்மி’ என்னும் புனைபெயர் கொண்ட திரிபுரசுந்தரி, 1921-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி சீனிவாசன்-பட்டம்மாள் தம்பதிக்குப் பிறந்தார்.

தொட்டியத்தில் தொடக்கக் கல்வி, முசிறியில் மேல்நிலைக் கல்வி முடித்து, திருச்சி கல்லூரியில் பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். சிறுவயதிலிருந்தே மருத்துவராக வேண்டும் என்ற கனவு திரிபுரசுந்தரிக்கு இருந்தது. டாக்டர் படிப்புக்காகச் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அப்போதுதான் எழுத்தாளரானார்.

- லக்ஷ்மியின் முதல் சிறுகதை "தகுந்த தண்டனையா?"
- முதல் நாவல் "பவானி"



லக்ஷ்மியின் இரண்டு நாவல்கள் திரைப்படமாக வெளி வந்துள்ளன. காஞ்சனா (காஞ்சனையின் கனவு), இருவர் உள்ளம் (பெண் மனம்) 1963. இருவர் உள்ளத்திற்கு திரைக்கதை வசனம் கலைஞர் மு. கருணாநிதி. அவருடைய பெண் மனமும், மிதிலா விலாசமும் தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசு பெற்றது. 2009-இல் தமிழக அரசு லக்ஷ்மியின் படைப்புக்களை, நாட்டுடைமையாக்க முன் வந்தபோது, அவர் வாரிசுகள் மறுத்து விட்டார்கள். துணிவுக்கும், தன்னம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய லக்ஷ்மி, 1947-57 காலகட்டங்களில், தொடர்கதைகளுக்கு ஒரு முக்கிய அந்தஸ்து கொடுத்தவர்களில் முக்கியமானவர்.

எழுத்தாளர் லக்ஷ்மியின் முதல் சிறுகதையான 'தகுந்த தண்டனையா?', 10-3-1940 தேதியிட்ட விகடன் இதழில் வெளியாகியது. பவானியில் தொடங்கி ஏறத்தாழ 150 புதினங்களும், எட்டுச் சிறுகதைத் தொகுதிகளும் எழுதியுள்ளார். "கதாசிரியையின் கதை' என்னும் தலைப்பில் தன் வரலாறு

உள்பட ஐந்து கட்டுரைத் தொடர்களும், "தாய்மை' உள்பட ஆறு மருத்துவ நூல்களும் எழுதியுள்ளார்.

1987-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் தேதி லக்ஷ்மி, தமிழர்களையும் நண்பர்களையும் எழுத்தையும் விட்டுப் பிரிந்தார்.

இவரைப் பற்றிய ஆய்வு நூல் எழுதிய பேராசிரியை கலா தாக்கர் "எழுத்தும் ஒரு வகை மருத்துவமே' என்று பொருத்தமாகத் தலைப்பிட்டுப் பயனுள்ள நூலொன்றை 1998-ஆம் ஆண்டு படைத்துள்ளார்.

லக்ஷ்மி நூற்றாண்டு 21 மார்ச் 1920-2020

நன்றி:

- லக்ஷ்மியின் கதாசிரியையின் கதை – பூங்கொடிப் பதிப்பகம் 1985
- தமிழ் இலக்கிய வரலாறு – மது.ச.விமலானந்தம்
- அகிலன் எழுதிய "கதைக்கலை, பாரி புத்தக்ப் பண்ணை
- சித்ரலேகா இர. எழுதிய "லட்சுமி சூடாமணி நாவல்கள்", சிநேகா வெளியீடு, குற்றாலம்
- கலாதாக்கர் எழுதிய "எழுத்தும் ஒருவகை இலக்கியமே", வானதிப் பதிப்பகம்
- சசிரேகா சிவ. எழுதிய "தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை", பார்த்திபன் பதிப்பகம், மதுரை
- சண்முகசுந்தரம் எழுதிய "தமிழில் வட்டார நாவல்கள்", காவ்யா, பெங்களூர்
- சிட்டி சிவபாதசுந்தரம் எழுதிய "தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்", கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
- சிதம்பர சுப்புரமணியன் எழுதிய "தமிழ் நாவல்களில் பெண் கதை மாந்தர்கள்", பாரி நிலையம்
- சீதாலெட்சுமி வே. எழுதிய "தமிழ் நாவல்கள் (அகர வரிசை)", உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
- "பெண்கள் படைப்பில் பெண்கள்", அன்னை தெரசா பல்கலைக் கழகம்

நூல் விவரங்கள்:

- *பதிப்பாளர்:* பூங்கொடி பதிப்பகம் **(Poonkodi Pathippagam)**
- *பக்கங்கள்:* **432**
- *விலை:* ரூ. **190.00**
- *ஆண்டு:* ஆகஸ்ட் **1983**
- *தொடர்புக்கு:* பூங்கொடி பதிப்பகம் , **14,** சித்திரைக்குளம் மேற்கு வீதி, மைலாப்பூர், சென்னை-**600004.**
- தொ.பேசி எண்: **4943074**

விகடனும் லக்ஷ்மியும்

கல்லூரி மாணவியாக இருந்ததாலும் சக மாணவர்களின் கேலியைத் தவிர்க்க எண்ணியதாலும் லக்ஷ்மி என்கிற புனைபெயரிலேயே எழுத ஆரம்பித்த திரிபுரசுந்தரி தன் படிப்பு முடியும் முன்பாகவே தொடர்கதைகள் வரை எழுத ஆரம்பித்தார். இவருடைய படிப்பு தொடரவேண்டும் என்பதற்காக வாசன் அளித்த ஆதரவு மிகவும் உயரியது. மாதத்திற்கு மூன்று சிறுகதைகள் மூலம் (அவை வெளிவந்தாலும் வராவிட்டாலும்) இவருக்குப் பணம் கிடைக்கும் வண்ணம் பார்த்துக் கொண்டார் அவர். தொடர்ந்து பணம் கிடைக்கும் வசதிக்காகத் தான் தொடர்கதையே எழுதினார் லக்ஷ்மி. இவருடைய முதல் தொடர்கதை "பவானி".

இவருடைய சிறுகதைகள் குடும்பப் பாங்குடனும், ஆபாசம் ஒருசிறிதும் இன்றியும், பெண்களின் பிரச்னைகளை மையப்படுத்தியும் இருந்ததால் வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இவருக்குக் கிடைத்தது.

படிப்பு முடியும் முன்பே "பெண்மனம்" என்கிற இன்னொரு நாவலும் எழுதி அதில் கிடைத்த பணத்தைத் தன் தங்கையின் திருமணத்துக்குக் கொடுத்து தன் குடும்பத்துக்கும் உதவிகரமாக விளங்கினார் லக்ஷ்மி.

தென் ஆப்பிரிக்காவில் திருமண வாழ்க்கை

லக்ஷ்மியின் மருத்துவப்படிப்பு முடிந்து அரசு மருத்துவராகப் பணியும் கிடைத்த பிறகு வாழ்க்கையின் பொருளாதாரப் பிரச்னைகள் முடிவுக்கு வந்தன. 1955-ல் கண்ணபிரான் என்பவருடன் திருமணம் ஆனது. இது காதல்மணம் என்பதுடன் கலப்பு மணமும் கூட. தென்னாப்பிரிக்காவில் குடியுரிமை பெற்றுவிட்ட தஞ்சைப் பிள்ளை வகுப்பினைச் சேர்ந்த கண்ணபிரானை இலங்கையில் நடைபெற்ற ஓர் இலக்கிய விழாவில் சந்தித்துக் காதல் வயப்பட்டு பதிவுத் திருமணம் செய்து கொண்டார் லக்ஷ்மி. கண்ணபிரான் ஒரு முதுகலைப் பட்டதாரி. தென்னாப்பிரிக்காவில் பத்திரிகைத் துறையில் இருந்தவர். கணவருடன் தென் ஆப்பிரிக்காவுக்குப் பயணமானார் லக்ஷ்மி. அங்கேயும் அரசு மருத்துவராகப் பணி கிடைக்க பெருமகிழ்ச்சியுடன் சமூகப் பணியிலும் ஈடுபட்டார். இவர்களுக்கு மகேஸ்வரன் என்கிற மகன் பிறந்தார்.

மீண்டும் தமிழகம்

1968-ஆம் ஆண்டு கண்ணபிரான் எதிர்பாராத விதமாக மரணம் அடைந்தார். அதன் பிறகு ஒன்பது ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவிலேயே இருந்த லக்ஷ்மி 1977-ஆம் ஆண்டு தமிழகம் திரும்பினார்.

அதன்பிறகு 1987-ஆம் ஆண்டு மரணமடையும் வரை முழுநேர மருத்துவப் பணியில் ஈடுபடாமல், பகுதிநேர மருத்துவ ஆலோசகராகவும் முழுநேர எழுத்தாளராகவும் திகழ்ந்தார். ஏராளமாக எழுதிக் குவித்தார்.

எழுத்தாளர் லஷ்மி

சில கதைகள்

https://s-pasupathy.blogspot.com/search/label/%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BF

காலத்தை வென்ற கதைகள்! – 5

லட்சுமி

https://kungumamthozhi.wordpress.com/2013/06/29/%e0%ae%95%e0%ae%be%e0%ae%b2%e0%ae%a4%e0%af%8d%e0%ae%a4%e0%af%88-%e0%ae%b5%e0%af%86%e0%ae%a9%e0%af%8d%e0%ae%b1-%e0%ae%95%e0%ae%a4%e0%af%88%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d-5/

தமிழ்ப் பெண் எழுத்தாளர்களில் லட்சுமிக்குத் தனி இடம் உண்டு. லட்சக்கணக்கான வாசகிகள் அவருக்கு. 'புத்தகம் வாசிக்க விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் லட்சுமியின் எழுத்தை நிச்சயம் படித்திருப்பார்' என்பதை மெய்ப்பிப்பது போல இருந்தன அவர் எழுத்துகள்.இயற்பெயர் திரிபுரசுந்தரி. 1923, மார்ச் 21 அன்று திருச்சி மாவட்டம் தொட்டியம் என்கிற ஊரில் பிறந்தார். சிறு வயதில் பாட்டி சொன்ன கதைகள் மனதில் வேரூன்ற, எழுத்தின் மேல் வசீகரம் கொண்டவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்தார். இரண்டாம் உலகப் போர் காரணமாக, நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு காரணமாக, தந்தை சீனிவாசன் இவருடைய படிப்பை நிறுத்த முடிவு செய்தார். லட்சுமியோ பத்திரிகைகளில் எழுதி, அதில் வரும் வருவாயைக்

கொண்டு படிப்பைத் தொடரலாம் என்று எண்ணினார். தொடர்ந்து எழுத ஆரம்பித்தார். படித்து, அரசு மருத்துவராக வேலையில் சேர்ந்தார். கண்ணபிரான் என்பவரை காதலித்து, மணம் செய்து கொண்டார். கணவருடன் தென்னாப்பிரிக்காவில் சிறிது காலம் வாழ்ந்தார். தென்னாப்பிரிக்காவிலும் அரசு மருத்துவராகப் பணியாற்றினார். இந்தத் தம்பதிக்கு மகேஸ்வரன் என்கிற ஆண் குழந்தை பிறந்தது. 1968ல் கணவர் இறந்த பிறகு ஒன்பதாண்டுகள் தென்னாப்பிரிக்காவில் இருந்தார். பிறகு, தமிழகம் திரும்பியவர் பகுதி நேரமாக மருத்துவம் பார்த்துக் கொண்டு, முழு நேர எழுத்துப் பணியில் ஈடுபட்டார். ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள், 150 நாவல்கள், 5 கட்டுரைத் தொகுப்புகள், 6 மருத்துவ நூல்களை எழுதியிருக்கிறார். தமிழக அரசு விருது உட்பட பல விருதுகளைப் பெற்றவர். இவருடைய 'ஒரு காவிரியைப் போல' என்கிற நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. 1987ம் ஆண்டு காலமானார்.

*****

தகுந்த தண்டனையா?

(இது எழுத்தாளர் லட்சுமி எழுதிய முதல் சிறுகதை. 10-3-1940ல் வெளியானது)

கல்யாணியின் வருகைக்காக ராமகிருஷ்ணன் எவ்வளவு நேரம்தான் காத்திருப்பான்? காலேஜ் லைப்ரரியின் வாசலில் நகத்தைக் கடித்த வண்ணம் சுவரில் சாய்ந்து கொண்டு, சுமார் ஒரு மணி நேரமாக அதே தியானமாக நின்று கொண்டிருந்தான். சென்ற மூன்று நாட்களாக அவளிடம் 'அந்த'ச் சங்கதியைச் சொல்லவேண்டும் என்று அவன் எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால், அவளைப் பார்த்தவுடன் அவனுடைய மனம் மாறிவிடும். இப்படி எத்தனை நாள்தான் காலந்தள்ளுவான்? எப்படியாவது ஒரு நாள் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டாமா? இதையெல்லாம் யோசிக்க யோசிக்க அவன் தலை கிறு கிறுத்தது.

ராமகிருஷ்ணன், வைத்திய கலா சாலையில் மூன்றாவது வருஷ மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தான். கல்யாணியும் அவனுடைய வகுப்பில்தான் படித்தாள். இவ்விருவரும் வகுப்பில் கெட்டிக்காரர்கள் என்று பெயர் பெற்றவர்கள். சில சமயங்களில் பரீட்சைகளில் கல்யாணி, ராமகிருஷ்ணனைக் கூடத் தோற்கடித்து விட்டு, எல்லா மெடல்களையும் பரிசுகளையும் தானே வாங்கிக் கொண்டு விடுவாள்.

ஆனால், அவ்வளவு கெட்டிக்காரியான அவள் முகத்தில் எப்பொழுதும் துக்கமே தாண்டவமாடும். அதற்குக் காரணம் ராமகிருஷ்ணனுக்கு நன்கு

தெரியும். அவள் ஒரு பால்ய விதவை. அதுவுமல்லாமல் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவள். உபகாரச் சம்பளம் பெற்றுப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தாள். தான் ஒரு விதவை என்றும், ஏழை என்றும், தனக்கு உலகத்தில் மற்ற மாணவிகள் போல் உல்லாசமாக இருப்பதற்கு உரிமை இல்லையென்னும் எண்ணம் அவளிடம் பலமாக வேரூன்றியிருந்தது. அதன் பயனாக அவள் எப்பொழுதும் தலை குனிந்தவண்ணமாக இருப்பாள்.

இவளுடைய போக்கும், நடையும், சோகம் குடிகொண்ட வதனமும் மற்ற மாணவ மாணவிகளுக்குப் பிடிப்பதில்லை. அவளைப் 'புஸ்தகப் புழு' என்றும், 'நடை பிணம்' என்றும் சிரிப்பதும் பரிகசிப்பதும் சகஜமாயிருந்தது.

ஆனால், சில காலத்துக்கெல்லாம், நடை பிணம் போல் இருந்த கல்யாணி திடீரெனப் புத்துயிர் பெற்று உணர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் விளங்கலானாள். அந்த மாறுதலுக்குக் காரணம் ராமகிருஷ்ணன்தான். ஒரு நாள் வகுப்பு முடிந்ததும் அவள் மாடியிலிருந்து இறங்கித் தனியாக வந்து கொண்டிருந்தாள். அப்பொழுது கால் செருப்பு தடுக்கி விடவே, புத்தகங்களைத் 'தடதட'வென்று போட்டுக் கொண்டு கீழே விழுந்துவிட்டாள். வேறு யாராவது அப்பொழுது அங்கே இருந்திருந்தால், அவள் பாடு மிகவும் பரிகாசத்துக்கிடமாயிருந்திருக்கும். ஆனால், ராமகிருஷ்ணன் கீழே விழுந்த புத்தகங்களை எடுத்துக் கொடுத்து, ''எங்கேயாவது அடிபட்டதா?'' என்று மிகவும் பரிவுடன் அவளை விசாரித்தான். அவனை நிமிர்ந்து பார்ப்பதற்குக் கூட அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஒன்றும் சொல்லாமல், ''வந்தனம்'' என்று மட்டும் கூறிவிட்டு, வேகமாகப் போய்விட்டாள்.

இப்படியாக ஆரம்பித்தது இவர்களுடைய சிநேகம். கொஞ்சங் கொஞ்சமாக, வாசக சாலையிலும் மற்றும் பல இடங்களிலும் சந்திக்கும் போதெல்லாம் ஒருவரையொருவர் யோக சேமங்கள் விசாரிக்க ஆரம்பித்தனர். இது நாளடைவில் நெருங்கிய நட்பில் முடிந்தது. அவனும் தன்னைப் போல் வறுமையில் அவதிப்படுபவன் என்பதைக் கல்யாணி தெரிந்து கொண்டாள். உபகாரச் சம்பளங்கூட வாங்காது, கலாசாலையில் சம்பளம் கொடுத்து எப்படித்தான் படிக்கிறானோ என்பதை நினைக்கும் போதெல்லாம் ஆச்சர்யமும் அனுதாபமும் அடைவாள். அவளுடைய அனுதாபத்தைப் பெறும்போதெல்லாம் ராமகிருஷ்ணன் தானும் ஓர் ஏழை என்பதை மறந்துவிடுவான். இப்படிப் பரஸ்பர அனுதாபம் காட்டி நண்பர்களாய் இருந்த இருவரும், தாங்கள் திடீரெனக் காதல் கடலில் இறங்கியிருப்பதை வெகு சீக்கிரத்தில் தெரிந்து கொண்டனர்.

“கல்யாணி! உனக்காகத்தான் நான் இந்த வறுமைக் கொடுமைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு படித்து வருகிறேன். நீ இல்லாவிட்டால் எனக்கு இந்த உலகமே பாழ் போல் தோன்றும்” என்று பல தடவை அவளிடம் ராமகிருஷ்ணன் சொல்லியிருக்கிறான். அவள் அதற்குப் பதில் ஒன்றும் சொல்ல மாட்டாள்.

இப்பொழுது கல்யாணி ஒரு புதுப் பெண்ணாக மாறிவிட்டாள். மௌன விரதம் பூண்டுகொண்டிருந்த அவள் எல்லா மாணவிகளிடமும் கலகலவென்று பேச ஆரம்பித்து விட்டாள். அவளிடம் ஏற்பட்ட இந்த மாறுதல்களைக் கவனித்த மற்ற மாணவ, மாணவிகள் பலவிதமாகப் பேச ஆரம்பித்தனர். பள்ளிக் கூட மாணவிகள் பேச ஆரம்பித்தால் கேட்க வேண்டுமா? ஆனால், ராமகிருஷ்ணனோ கல்யாணியோ அவற்றைக் காதில் போட்டுக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. இருவரும் தங்கள் பிற்கால சந்தோஷ வாழ்க்கையைப் பற்றிப் பல ஆகாயக் கோட்டைகள் கட்டி மகிழ்வதிலேயே முனைந்திருந்தனர்.

2

ஆனால், ராமகிருஷ்ணனுடைய ஆகாயக் கோட்டைகள், ஒரு வாரத்திற்கு முன் அவன் தந்தையிடமிருந்து வந்த கடிதத்தினால் திடீரென இடிந்து மண்ணோடு மண்ணாய் விட்டன. அந்தக் கடிதத்தைக் கல்யாணியிடம் காண்பித்து ஒரு முடிவுக்கு வந்து விடவேண்டுமென்று, சென்ற மூன்று நாட்களாக மிகவும் பிர யாசைப்பட்டான். அவளை நேரில் கண்டதும் அவன் தைரிய மெல்லாம் மறைந்துவிடும். சாதாரண விஷயங்களைப் பேசிவிட்டுப் போய்விடுவான். இன்று எப்படியாவது ஒரு முடிவுக்கு வந்து விடுவது என்ற தீர்மானத்துடன், வழக்கமாகச் சந்திக்கும் வாசக சாலையின் வாசலில், யோசனையில் ஆழ்ந்து நின்றுகொண்டிருந்தான். அவன் மனதில் கல்யாணிக்கும் அவனுக்கும் ஏற்பட்ட நட்பிலிருந்து உண்டான பல சம்பவங்கள், திரையில் படங்கள் தோன்றி மறைவது போன்று ஒன்றன் பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்தன.

கல்யாணியும் கடைசியில் வந்து சேர்ந்தாள். தன்னைக் கண்டு புன்னகையுடன் வருகிறவளை ஒரு குற்றவாளியைப் போல் ராமகிருஷ்ணன் பார்த்தான். வேறு ஒன்றும் பேசாமல், “கல்யாணி! இந்தக் கடிதத்தை நீயே படித்துப் பார்!” என்று சொல்லி, அவளிடம் தன் தந்தையின் கடிதத்தை நீட்டினான். அவள் அதை வாங்கிப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். அப்பொழுது ராமகிருஷ்ணனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. முகத்தில் குப்பென்று வியர்க்க ஆரம்பித்துவிட்டது. அவளைப் பார்க்கச் கூடச் சகிக் காதவனாய் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான். கல்யாணி தனக்குள் அக்கடிதத்தை வாசிக்கலானாள். அதில் எழுதியிருந்த தாவது...

“சிரஞ்சீவி ராமுவுக்கு, அப்பா அநேக ஆசீர்வாதம். நீ பரீட்சையில் இவ்வருஷம் தேறிவிட்டதைப் பற்றி மிகவும் சந்தோஷம். சம்பளமும் புத்தகமும் சேர்ந்து ஐந்நூறு ரூபாய் ஆகிறதென்று எழுதியிருந்தாயே, அதைப் பார்த்ததும் எனக்குக் கவலை அதிகமாகிவிட்டது. உனக்கு நம் குடும்பத்தின் நிலைமை தெரியாது என்று சொல்லவில்லை. என்னால் அவ்வளவு பணம் அனுப்ப இப்பொழுது சக்தியே இல்லையே!

இருந்தாலும் நம் கஷ்டங்களுக் கெல்லாம் ஒரு வழி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நம்ப ஊர் தாசில் சேஷய்யர், போன வாரம் உன் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு போனார். உன் ஜாதகமும் அவர் பெண் சுசீலாவினுடைய ஜாதகமும் நன்றாகப் பொருந்தியிருப்பதாகச் சொல்கிறார். சித்திரையில் உன் லீவின்போது கல்யாணத்தைச் செய்துவிடலாம் என்றும், உன் மேல் படிப்பைத் தாமே கவனித்துக் கொள்வதாகவும் சொல்கிறார். பெண்ணை உன் அம்மா போய்ப் பார்த்தாள். நன்றாகத்தான் இருக்கிறாள். இப்படிப் பெரிய இடத்து சம்பந்தம் நம் போன்றவர்களுக்குக் கிடைப்பது துர்லபம். உன் படிப்புக்காக இனி எனக்கு ஒரு பைசாகூட அனுப்பச் சக்தி இல்லை. நீ பெரியவனாகப் போய்விட்டதால், உன்னை நான் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. சீக்கிரத்தில் நம்மிஷ்டத்தை அவருக்குத் தெரிவிக்க வேண்டுமாதலால் உடனே உன் சம்மதத்தை அறிவிக்கவும்.

இப்படிக்கு அன்புள்ள, வேங்கடராமையர்.”

இதைப் படித்ததும் கல்யாணிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. உலகமே இருண்டுவிட்டது போல் ஒரு நிமிஷம் தோன்றியது. அவள் எண்ணாததெல்லாம் எண்ணினாள். சற்று யோசித்துப் பார்த்துவிட்டு, ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். அவள் தன் வருத்தத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மிகவும் பரிவுடன், “இதற்கு என்ன பதில் எழுதப்போகிறீர்கள்?” என்று கேட்டாள்.

அவள் இப்படிக் கேட்டதும், ராமகிருஷ்ணன் திடுக்கிட்டான். ஏனென்றால், அவள் கோப, தாபப்படாமல் இவ்வளவு அமைதியாக நடந்து கொள்வாளென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் சமாளித்துக்கொண்டு, “நீயே சொல். நான் என்ன செய்வேன்? என் மனம் மிகவும் குழம்பிப் போய் இருக்கிறது” என்றான்.

உடனே கல்யாணி, “அப்படியென்றால் நீங்கள் அப்பா சொல்வது போலவே செய்யுங்கள். சம்மதம் என்று உடனே பதில் எழுதிவிடுங்கள். நான் போய் வருகிறேன்” என்று சொல்லிவிட்டுத் தலைகுனிந்த வண்ணம்

உட்கார்ந்திருந்தாள். அவள் மனம் அப்பொழுது பட்டபாடு விவரிக்க முடியாதது.

''கல்யாணி! அப்படியென்றால் என்னை ஒரு கோழையென்று நினைத்து வெறுத்துத்தானே இப்படிச் சொல்கிறாய்?'' என்று தழுதழுத்த குரலில் ராமகிருஷ்ணன் கேட்டான்.

''இல்லை. அப்படி நினைத்திருந்தால் நான் வேறு விதமாகப் பதில் சொல்லியிருப்பேன். நாம் இருவரும் இதுவரையில் கற்பனா உலகில் வசித்து வந்தோம். இன்று நிஜ உலகத்திற்கு வந்திருக்கிறோம்.

நடக்கமுடியாதவைகளைப் பற்றிப் பல ஆகாயக் கோட்டைகள் கட்டி மனம் புண்ணடைவதனால் என்ன பயன்? நீங்களே யோசித்துப் பாருங்கள்... என்னை மணந்து கொண்டால் உங்களுக்கு ஏதாவது உபயோகம் உண்டா? நானும் உங்களைப் போல் ஏழை. மேலும் நான் விதியின் கொடுமைக்கு ஆளானவள். சமூகத்தை எதிர்த்து இந்தக் காரியத்தைச் செய்ய நம்மிடம் அவ்வளவு சக்தி இல்லை. எனக்குத் தங்கை, தம்பிகள் இருக்கிறார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவது என் பொறுப்பாயிருக்கிறது. அப்படியிருக்கையில் நம்முடைய சந்தோஷமே பெரிதென்று நினைத்து நான் உம்மைக் கட்டாயப்படுத்தினால், நான்தான் சுயநலக்காரியாவேன். நீங்கள் எங்கேயாவது சௌக்கியமாக இருந்தால், அதுவே எனக்குப் போதும். அவ்வளவுதான் நான் கொடுத்து வைத்த சந்தோஷம். நான் போய் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் 'பொலபொல'வென்று கண்ணீர் உகுத்தாள். ராமகிருஷ்ணனும் தாங்கமுடியாத துக்கத்தினால் சிறு குழந்தையைப் போல் விம்மினான். இப்படியாக இவர்களின் காதல் கோட்டை தகர்ந்து, பொடியாய் விட்டது.

அந்த வருஷம் கோடை விடு முறையில், ராமகிருஷ்ணனுக்கும் சௌபாக்யவதி சுசீலாவுக்கும் விவாகம் இனிதாக நடந்தேறியது.

3

இது நடந்து ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது கல்யாணி, பாலூர் டிஸ்டிரிக்ட் போர்டு ஆஸ்பத்திரியில் லேடி டாக்டர். ஒரு கவலையுமில்லாமல் பொது ஜன சேவையிலே கருத்தாய் வேலை பார்த்து வந்தாள். ஐந்து வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட மனப்புண் இப்போது ஒருவாறு ஆறியிருந்தது.

ஒருநாள் பன்னிரண்டு மணி இருக் கும்... வீட்டின் வாசற் கதவை யாரோ 'தடதட'வென்று தட்டினார்கள். கல்யாணிக்கு மிக்க அலுப்பாயிருந்தாலும் அதைப் பாராட்டாமல் போய்க் கதவைத் திறந்தாள். ஒரு கிழவர், கையில்

லாந்தருடன் காட்சியளித்தார். தமது பெண்ணுக்குக் கொஞ்ச நாளாக ஜுரம் என்றும், அன்று அதிகமாய் விட்டதால் பயமாக இருப்பதாகவும், உடனே வந்து பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். கல்யாணி தன் சிரமத்தை மறந்து, வேண்டிய மருந்துகளை எடுத்துக் கொண்டு அவருடன் கிளம்பினாள்.

அவள் சிகிச்சை செய்யச் சென்ற நோயாளி, ஓர் இளம் பெண். கல்யா ணியை அழைத்து வந்த கிழவரின் பெண். வீட்டுக் கூடத்து அறையில் ஒரு கட்டிலில் படுத்திருந்தாள். தேக நிலையைப் பரிசோதித்ததில், அவள் மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதைக் கல்யாணி தெரிந்து கொண்டாள். அதனால் அந்த வயோதிகரையும் அவர் மனைவியையும் கூப்பிட்டு ரகசியமாக, ''இந்த கேஸைப் பற்றி நான் தைரியமாய் ஒன்றும் சொல்வதற்கில்லை. எதற்கும் என்னால் ஆனவரை முயன்று பார்க்கிறேன்'' என்றாள்.

இதைக் கேட்டதும் கிழவரும் அவர் மனைவியும் பதறினார்கள். ''ஐயோ! கொஞ்ச நாள் சீராடலாமென்று எவ்வளவோ பாடுபட்டு அழைத்து வந்தேனே! டாக்டர்! நீங்கள் எப்படியாவது அவளைப் பிழைக்க வைத்து விடுங்கள்! மாப்பிள்ளை இரண்டு நாளில் வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறார். வேண்டுமானால் தந்தியும் அடிக்கிறேன். வந்து பார்த்தால் அவர் மனசு எப்படி இருக்கும்?'' என்று கண்ணீரும் கம்பலையுமாய் அவர்கள் இருவரும் கல்யாணியை வேண்டிக் கொண்டனர்.

கல்யாணி என்ன சிகிச்சை செய்யலாமென்று யோசனை செய்த வண்ணம் எதிர்ச் சுவரை உற்று நோக்கினாள். அவள் கவனம் அகஸ்மாத்தாக அங்கே மாட்டியிருந்த ஒரு போட்டோவின் மேல் சென்றது. படத்தில் நிற்கும் அந்தப் பெண்ணும் வாலிபனும் யார்? பெண்தான் அங்கே அவள் முன் கட்டிலில் படுத்திருப்பவள். வாலிபன் வேறு யாருமில்லை; அந்தப் பழைய ராமகிருஷ்ணன்தான். அவள் ஒரு நிமிஷத்தில் எல்லாவற்றையும் ஊகித்துக் கொண்டாள். நோயாளியாய்ப் படுத்திருப்பவள், தான் இருக்க வேண்டிய ஸ்தானத்தில் இப்பொழுது இருப்பவள்.

இதை நினைத்ததும் அவளுக்குத் தன்னையறியாமலேயே கோபம் உண்டாயிற்று. கல்யாணி இப்படிச் சுவரைப் பார்த்து நின்றுகொண்டிருப்பதைக் கண்ட கிழவர், ''என்ன யோசிக்கிறீர்கள்? எனக்குப் பயமாயிருக்கிறதே! குழந்தை பிழைப்பாளா, மாட்டாளா? உண்மையைச் சொல்லி விடுங்கள்'' என்றார். அவர் பேசியதைக் கேட்டதும்தான், கல்யாணிக்கு தான் சிகிச்சை செய்ய வந்திருக்கும் உணர்வு திடீரென்று வந்தது. அவள் தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''இல்லை,

என்ன மருந்து கொடுக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்... நீங்கள் ஆளை அனுப்புங்கள். நான் மருந்து அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

4

அன்றும் மறுநாளும் கல்யாணி நான்கு ஐந்து தடவை வந்து பார்த்துத் தக்க மருந்து கொடுத்துச் சிகிச்சை செய்தாள். அந்தப் பெண்ணுக்குக் குணமாகிக் கொண்டு வந்தது.

மூன்றாவது தினம் காலையில் அவள் நோயாளியைப் பார்த்து விட்டு, ''இனி பயம் இல்லை. கொஞ்சம் ஓய்வு வேண்டும். இந்த மருந்தையே கொடுத்து வாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டிருந்த போதே, வாசலில் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

மறு நிமிடம் ஒருவர் 'தடதட' வென்று அவசரமாக உள்ளே நுழைந்தார். நுழைந்தவர் நேரே நோயாளியிடம் சென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு, ''உடம்பு எப்படி இருக்கிறது, சுசீ?'' என்று பதைப்புடன் கேட்டார்.

கிழவர் குறுக்கிட்டு, ''குழந்தைக்குக் குணமாகி விட்டது. இனி பயமில்லை என்று டாக்டர் இப்போதுதான் சொன்னார். இவளை இந்தப் புண்ணியவதிதான் காப்பாற்றினார்'' என்று டாக்டர் கல்யாணி நின்றிருந்த இடத்தைப் பார்த்தார். ராமகிருஷ்ணனும் டாக்டருக்கு வந்தனம் கூறுவதற்காக அவளைப் பார்க்கத் திரும்பினான். ஆனால் கல்யாணி அங்கே இல்லை! ராமகிருஷ்ணன் உள்ளே வந்தவுடனேயே, அவர்கள் அறியாமல் கல்யாணி வெளியே போய்விட்டாள்.

வண்டியில் சென்றபோது கல்யாணி, ''சுவாமி! எட்டாத கோட்டைகள் கட்டியதற்காக இந்த மனப்புண்ணைக் கொடுத்து என்னைத் தண்டித்தீர்கள். போதும், எப்படியாவது அவர்கள் இரண்டு பேரும் சௌக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழட்டும்'' என்று தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அவளுக்கு அது தகுந்த தண்டனையா?

*****

லக்ஷ்மி

https://siliconshelf.wordpress.com/2013/03/28/%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%B7%E0%AF%8D%E0%AE%AE%E0%AE%BF/

லக்ஷ்மி ஒரு காலத்தில் ஸ்டார் எழுத்தாளர். ஒரு பத்து வருஷங்களாவது பெண்களின் மன நிலையை உண்மையாக எழுத்தில் கொண்டு வந்தார். அவரும் ஒரு சிம்பிள் ஃபார்முலாவை பயன்படுத்தினார் – "பத்தினிக்கு இன்னல் வரும் பழையபடி தீரும்" – இந்த ஃபார்முலாவை அவர் ஐம்பதுகளின், அறுபதுகளின் மத்திய தர வர்க்க, வேலைக்கு போக ஆரம்பித்த பெண்களின் மனம் கவரும் வண்ணம் சித்தரித்தார். அவரும் சில சமயம் புரட்சி செய்து கல்யாணம் ஆகாதபோதும் இன்னல் வரும் (ஆனால் பழையபடி தீரும்) என்று ஃபார்முலாவை மாற்றுவார், அதுவே அவருக்கு அதிகபட்சம். ஒரு காலகட்டத்தின் தேவையை பூர்த்தி செய்தார் என்பதற்கு மேல் அவரைப் பற்றி சொல்ல எதுவுமே இல்லை. அவர் நினைவு வைத்துக் கொள்ள வேண்டிய (வணிக) எழுத்தாளர் இல்லை.

ஒரு காவிரியைப் போல என்ற நாவலுக்கு சாஹித்திய அகாடமி விருது கிடைத்திருக்கிறது. இந்தப் புத்தகத்துக்கு விருது கொடுத்து தமிழ் இலக்கியத்தை கேவலப்படுத்தி இருக்கிறார்கள். **மிதிலாவிலாஸ், ஸ்ரீமதி மைதிலி, பெண்**

மனம் போன்ற புத்தகங்கள் அவர் எழுதியவற்றில் சிறந்தவை என்று சொல்லலாம். ஆனால் அவை எல்லாமே வீண்தான். அவருடைய எழுத்துகளை 2009-இல் தமிழக அரசு நாட்டுடமை ஆக்கியது, ஆனால் அவரது வாரிசுகள் இதை மறுத்துவிட்டார்கள். (இன்னும் புத்தகங்கள் விற்று நல்ல ராயல்டி வருகிறது போலும்!)

ஜெயமோகன் அவரது காஞ்சனையின் கனவு, **அரக்கு மாளிகை** ஆகியவற்றை தன் பரப்பிலக்கிய லிஸ்டில் சேர்த்திருக்கிறார். இந்தப் பதிவையே ஜெயமோகன் சொன்னார் என்பதால் "அரக்கு மாளிகை" பற்றி எழுதலாம் என்றுதான் ஆரம்பித்தேன். ஜெயமோகன் தனது seminal பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு நாவலையும் பற்றி நாலு வரி எழுத வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை. ஆனால் என் கண்ணில் அவ்வளவு worth இல்லை. எண்ணி நாலே நாலு வரிதான் எழுத முடியும். அதனால் இதை லக்ஷ்மியைப் பற்றிய பதிவாக மாற்றிவிட்டேன்.

ஒரே ஒரு புத்தகம் படிக்க வேண்டுமென்றால் ஜெயமோகன் பரிந்துரைக்கும் **அரக்கு மாளிகை, இருவர் உள்ளம்** திரைப்படமாக வந்த **பெண் மனம், மிதிலாவிலாஸ், ஸ்ரீமதி மைதிலி** இவற்றில் ஏதாவது ஒன்றைப் படிக்கலாம்.

ஜெயமோகன் பரிந்துரைக்கும் **அரக்கு மாளிகை**யில் வழக்கமான நாயகி. தாத்தா அவுட். பணக்கார பெரியப்பாவுக்கு அவளை வீட்டில் வைத்துக் கொள்ள இஷ்டமில்லை. வேலைக்குப் போன இடத்தில் முதலாளியம்மாவின் கணவன் அசடு வழிகிறான். அதாவது வழக்கமான பிரச்சினைகள். இன்னொரு வீட்டில் governess மாதிரி ஒரு வேலை. அங்கே வழக்கமான அழகான இளைஞனோடு வழக்கமான காதல். சதி செய்யும் அவன் சித்தி. இதற்கு மேலும் இதைப் பற்றி சொல்ல வேண்டுமா என்ன?

பெண் மனம்: (1946) ஏழைப் பெண் சந்திராவை தன் பண பலத்தால் ஜகன்னாதன் மணக்கிறான். அவள் தன்னை விரும்பவில்லை என்று தெரியும்போது ஒதுங்கிப் போக பார்க்கிறான். கடைசியில் இருவரும் இணைகிறார்கள். "உங்களுக்கு என் உடல்தானே வேண்டும்? எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் என் உள்ளம் கிடைக்காது" என்று சந்திரா முதல் இரவில் சொல்வது

அந்நாளில் பேசப்பட்டிருக்கும் என்று தோன்றுகிறது. சிவாஜி, **சரோஜாதேவி, எஸ்.வி. ரங்காராவ், எம்.ஆர். ராதா** நடித்து கருணாநிதி வசனத்தில் **இருவர் உள்ளம்** என்று சினிமாவாகவும் வந்தது.

ஒரு காவிரியைப் போல: இந்த முறை தென்னாப்பிரிக்கப் பெண். அவளுக்குப் பல இன்னல்கள். கடைசியில் காதல் நிறைவேறுகிறது. இதற்கெல்லாம் சாகித்ய அகாடமி பரிசா?

மிதிலாவிலாஸ்: மாமன் வீட்டில் வளரும் தேவகி ஏறக்குறைய வேலைக்காரிதான். அவளுக்கு மாமன் மகன் ஈஸ்வரன் மேல் ஈர்ப்பு, ஈஸ்வரனோ கிரிஜா பின்னால். தேவகியின் நல்ல குணம் எல்லார் மனதையும் மாற்றி, பிறகென்ன, சுபம்! சரளமாகப் போகும் நாவல், எந்த வித முடிச்சும் இல்லாவிட்டாலும் படிக்க முடிகிறது.

ஸ்ரீமதி மைதிலி அவரது வழக்கமான கதைதான். மைதிலியை அடக்கி ஆளும் எல்லாரும் கடைசியில் மைதிலியிடம் உதவி பெறுகிறார்கள்.

அவருடைய இன்னும் சில புத்தகங்கள் பற்றி:

அத்தை: அந்தக் காலத்து தொடர்கதை ஃபார்மட்டுக்கு நன்றாகவே பொருந்தி வரும்.இந்த முறை பணக்கார அண்ணனை எதிர்த்து ஏழையை மணக்கும் பத்தினிக்கு பல இன்னல்கள்.

நாயக்கர் மக்கள்: பெரிதாக சொல்ல ஒன்றுமில்லை. நாயக்கரின் மகன் அவரது எதிரியின் பெண்ணை காதலிக்கிறான். நாயக்கரின் மகளும் மாப்பிள்ளையும் சேராமல் இருக்க மாப்பிள்ளையை ஒரு தலையாக காதலித்த பெண் சூழ்ச்சி செய்கிறாள். கோர்வையாக இருக்கிறது, தொடர்கதை ஃபார்மட்டுக்கு பொருந்தி வரும், அவ்வளவுதான்.

பண்ணையார் மகள்: பண்ணையாரும் மனைவியும் பிரிகிறார்கள். மகள் ஏழ்மையில் வளர்கிறாள், அப்பா பெரிய பண்ணையார் என்றே தெரியாது. அம்மா இறக்க, பெண் சொத்துக்கு வாரிசாக, மானேஜர் சொத்தை ஆட்டையைப் போடப் பார்க்க... இதற்கு மேல்

கதையை யூகிக்க மாட்டீர்களா என்ன? தொடர்கதை ஃபார்மட்டுக்கு ஐம்பது அறுபதுகளில் பொருந்தி வந்திருக்கும், அவ்வளவுதான்.

சூரியகாந்தம்: வழக்கமான அவரது நாவல்தான், இருந்தாலும் வந்த காலத்தில் விரும்பிப் படிக்கப்பட்டிருக்கும். இந்த முறை கஷ்டப்பட்டு வளர்க்கும் அத்தையை வில்லியின் மயக்கத்தில் எதிர்த்துப் பேசிவிட்டு திருந்தும் மருமகன். அவனுக்கு ஊனமுற்ற ஒரு முறைப்பெண், சதி செய்யும் மாற்றாந்தாய் என்று வழக்கமான பாத்திரங்கள்.

அவள் ஒரு தென்றல், ஜெயந்தி வந்தாள், கை மாறியபோது, கூறாமல் சன்யாசம், குருவிக்கூடு, மோகனா மோகனா, மோகினி வந்தாள், நீதிக்கு கைகள் நீளம், நிகழ்ந்த கதைகள், ராதாவின் திருமணம், சீறினாள் சித்ரா, உறவு சொல்லிக் கொண்டு, உயர்வு, வசந்தத்தில் ஒரு நாள், வேலியோரத்தில் ஒரு மலர், விடியாத இரவு போன்ற குறுநாவல்களையும் சமீபத்தில் படித்தேன். இவையெல்லாம் இன்று தண்டமாகத தெரிந்தாலும் ஒரு காலகட்டத்தின் தேவையை பூர்த்தி செய்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

கங்கையும் வந்தாள்: ஹீரோவை ஏமாற்றும் ஹீரோயினின் அப்பா. ஹீரோ-ஹீரோயினுக்கும் தமிழ் நாவல் வழக்கப்படி காதல், ஆனால் வெளியே சொல்லவில்லை. அப்பாவை பழிவாங்க ஹீரோயினை மணந்து பிறகு தள்ளி வைக்கிறான். குழந்தை. குழந்தை முகம் பார்த்து அவன் மனம் மாறுகிறது. சுத்த வேஸ்ட்.

காஷ்மீர் கத்தி: தவறான முறையில் பிறந்த பையன் குப்பத்தில் வளர்கிறான், அவனது பிரச்சினைகள். படிக்கலாம்.

கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி: வேஸ்ட். பெரிய மனிதர் தேவநாதன் உண்மையில் குரூரமானவர். தன்னை மணந்து கொள்ள மறுக்கும் இளம் பெண்+காதலனை உயிரோடு ஒரு அறையில் பூட்டிவிடுகிறார். ஆனால் வேலைக்காரன் வைரவன் தப்ப வைக்கிறான்.

முருகன் சிரித்தான்: பணக்கார, திமிர் பிடித்த டாக்டர் கணவன், மாமியார்; விவாகரத்து வரை விஷயம் போய்விடுகிறது. தற்செயலாக ஒரு விபத்து ஏற்பட, குடும்பம் இணைகிறது. வேஸ்ட்.

ரோஜா வைரம்: வேஸ்ட் என்ற ஒரு வார்த்தைக்கு மேல் இதைப் பற்றி எழுதும் எதுவும் வேஸ்ட். For the record, தென்னாப்பிரிக்காவில் வைர வியாபாரம் செய்ய முயற்சிக்கும் ஒரு குடும்பம்.

உயிரே ஓடி வா: இன்னொரு வேஸ்ட். பணக்காரப் பெண் ரேவதியை அவள் எழுதிய காதல் கடிதங்களை வைத்து முகுந்தன் ப்ளாக்மெயில் செய்கிறான். ரேவதியை மனம் செய்து கொள்ளப்போகும் சிவகுருவும், சிவகுருவின் அம்மாவும் அவனை பரவாயில்லை போ என்று துரத்துகிறார்கள்.

வீரத்தேவன் கோட்டை: தண்டம். இரண்டு குடும்பங்கள் எதிரிகள், வழக்கம் போல வாரிசுகளிடம் காதல், அப்புறம்தான் தெரிகிறது காதலன் வீரத்தேவன் எதிரி குடும்பத்தில் பிறந்து இங்கே வளர்கிறான் என்று.

விசித்திரப் பெண்கள்: சிறுகதைத் தொகுப்பு. எதுவும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய சிறுகதை இல்லை. ஆனால் மொத்தமாகப் படிக்கும்போது பழைய விகடன்/கல்கி/கலைமகள் இதழ்களைப் புரட்டுவது போல ஒரு உணர்வு ஏற்பட்டது.

அவரது புத்தகங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டபோது மறைந்த **சேதுராமன்** எழுதிய அறிமுகம் கீழே.

சேதுராமன் தரும் புதிய தகவல்: “அண்மையில் லக்ஷ்மியின் சகோதரர் திரு. ராகவனுடனும், மருமகள் திருமதி மகேஸ்வரனிடமும் பேசினேன். லக்ஷ்மியின் வாரிசுகள் தமிழ் நாடு அரசின் நாட்டுடைமைக்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரிவித்தனர்”.

சமுதாயத்தில் எத்துணைதான் படித்திருந்தாலும், பெண்ணுக்குச் சம உரிமை இல்லை; பெண்கள் சரி நிகர் சமான நிலை பெற வேண்டும்

என்பதே குறிக்கோள். பெண் பிரச்சினை, உரிமையே மையக் கருத்து. பெண்ணின் பெருமை பேசுவதே, அருமை பாராட்டுவதே அடித்தளம். இல்லத்தின் உயிர் நாடியே பெண்தான் என்பது. குடும்பச் சிக்கல்களை அலசுவது. பெண்மையின் மென்மை உணர்வுகள்/ஆண்மையின் வன்மை உணர்ச்சிகள், இவற்றின் உரசல்களால் உருவாகும் நிகழ்ச்சிகளைப் பின்னித் தருபவர்; அதேசமயம் நமது தமிழ் மரபினையும், இந்தியப் பண்பாட்டினையும் உயிராகப் பேணி எழுதி வருபவர் – அவர் தான் லக்ஷ்மி என்கிற டாக்டர் எஸ்.திரிபுரசுந்தரி (மது.ச. விமலானந்தம்)

சிதம்பரத்தை அடுத்துள்ள அம்மாபேட்டை என்ற சிறு கிராமத்தில் 1921ம் வருஷம் மார்ச் மாதம் 21 தேதி பிறந்தவர் லக்ஷ்மி. பெற்றோர் திருச்சி ஜில்லா தொட்டியம் கிராமத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீனிவாசன், பட்டம்மாள் என்ற சிவகாமி. உடன் பிறந்தவர்கள் ஐவர், நான்கு சகோதரிகள், ஒரு தம்பி.

தொட்டியம் தொடக்கப் பள்ளியிலும், முசிறி உயர் நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்ற லக்ஷ்மி, தனது உயர் நிலைக் கல்வியைத் திருச்சியிலுள்ள ஹோலி க்ராஸ் கல்லூரியில் தொடர்ந்தார். காரணம் ஐந்தாவது ஃபாரம் படிப்பை முடித்து எஸ்.எஸ்.எல்.சி வகுப்புக்குப் போக வேண்டிய சமயம், முசிறிப் பள்ளியின் தலைமையாசிரியர் “ஆண்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கும் பள்ளியில் தொடர்ந்து வயது வந்த ஒரு பெண்ணைப் படிக்க அனுமதிக்க முடியாது” என்றதால்தான். சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால், முறையிட்டு, ஹாஸ்டல் வசதியைப் பெற்றார் லக்ஷ்மி. தமிழில் வகுப்பில் முதல் மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் ஆண்டு ஒரு பரிசையும் பெற்றார். இண்டர் முடித்தவுடன் மருத்துவம் படிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன், சென்னையிலுள்ள கல்லூரிகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பினார். முதலில் வெய்டிங் லிஸ்டில் இருந்த போதிலும் இவருக்கு சென்னை ஸ்டான்லி மருத்துவக்கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படிக்க இடம் கிடைத்தது.

முதல் ஆறுமாதங்கள் ப்ரி-ரிஜிஸ்ட்ரேஷன் ஸ்டான்லியிலும், கல்லூரியில் வசதிகள் இல்லாததால், அனாடமி, ஃபிசியாலஜி படிப்பை மதராஸ் மெடிகல் காலேஜில் இரண்டு வருஷங்கள் தொடர்ந்து, மூன்றாம் வருஷப் படிப்பைத் தொடர ஸ்டான்லி

திரும்பினார். இவர் மருத்துவம் படித்த காலம் இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம். அதன் தாக்கங்கள் எப்படியிருந்தன என்பதை **கதாசிரியையின் கதை** என்ற தமது சுய சரிதத்தில் விவரமாக எழுதியிருக்கிறார் லக்ஷ்மி. மருத்துவம் படித்துக் கொண்டிருக்கும்போது ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள எழுத்தின் உதவியை நாடினார் லக்ஷ்மி. அக்காலத்தில் ஆனந்த விகடன் காரியாலயம் ஸ்டான்லிக்கு அருகே ப்ராட்வேயில் தான் இருந்தது. இதைப் பற்றி திருமதி **பட்டம்மாள் வாசன்** நினைவு கூர்கிறார்:

ஒரு நாள் லக்ஷ்மி ஃபோன் பண்ணினா. "நான் கதையெல்லாம் எழுதுவேன், உங்கள் கணவரைப் பார்த்துப் பேச வேண்டும், உதவி செய்வீர்களா?" நீ ஆஃபீசுக்குப் போனால் அவரைப் பார்க்கலாம் என்றேன். அவரிடம் "டாக்டருக்குப் படிக்க வேண்டும், எங்களுக்கு இப்போது நிதி வசதி சரியாயில்லை. என்னுடைய கதைகள் சிலதைக் கொண்டு தருகிறேன். பிரசுரித்துப் பண உதவி செய்தால் சந்தோஷப்படுவேன்" என்று கேட்டிருக்கிறாள். நல்ல கதைகள் என்றால் பிரசுரிப்போம் என்று சொன்ன ***வாசன்,*** *பின்னர் கதைகள் தரமாக இருக்கவே பிரசுரம் செய்து உதவினார்.*

டாக்டர் படிப்பு முடித்ததும் லக்ஷ்மியின் குடும்பம் சென்னையிலேயே குடியேறிற்று. தங்கைகள் கல்யாணம் பொறுப்பேற்று நடத்தி முடித்தார். 1955ம் வருஷம் தானும் கண்ணபிரான் என்ற தென்னாப்பிரிக்கத் தமிழரை திருமணம் செய்து கொண்டார். சென்னையிலுள்ள அடையாறு தியோசாஃபிகல் சொசைட்டியில்தான் இந்தத் திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பின் லக்ஷ்மி இருபத்தியிரண்டு வருஷங்கள் தென்னாப்பிரிக்காவில் தங்கியிருந்தார். மகப்பேறு வைத்தியராகப் பணியாற்றினார். இத்தம்பதிகளுக்கு மகேஸ்வரன் என்ற ஒரு பிள்ளை.

1966ம் வருஷம் கண்ணபிரான் இறந்தது லக்ஷ்மியை மிகவும் பாதித்தது. இருப்பினும் அங்கேயே தன் வாழ்க்கையைத் தொடர்ந்த லக்ஷ்மி 1977ம் வருஷம் சென்னை திரும்பினார். என்ன காரணமாகவோ அதன் பிறகு அவர் தொடர்ந்து எழுதவில்லை. மகேஸ்வரனையும் மருத்துவப் படிப்பில் சேர்த்து அவரையும் மருத்துவராக்கினார்.

பதினான்கு வயதிலேயே எழுத ஆரம்பித்த லக்ஷ்மி நாற்பத்தி ஐந்து ஆண்டுகள் படைப்பிலக்கியம் செய்து, ஆயிரத்துக்கும் மேலான சிறுகதைகள், நூற்றுக்கும் மேலான நாவல்கள் வெளியிட்டுள்ளார். மருத்துவம், மகப்பேறு போன்ற பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். வானொலி நாடகங்களும் எழுதியுள்ளார். இவரது முதல் நாவல் **பவானி** (1940). **பெண் மனம்** (1946), **மிதிலா விலாஸ்** என்ற இரு நாவல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசையும், **ஒரு காவிரியைப் போல** 1984ல் **சாகித்திய அகாதெமி** விருதையும் பெற்றன. காஞ்சனையின் கனவு, பெண் மனம் என்ற நாவல்கள் காஞ்சனா, இருவர் உள்ளம் என்ற தலைப்புகளுடன் மூன்று தென் மொழிகளில் திரைப் படங்களாயின. இருவர் உள்ளம் படத்திற்கு, திரைக்கதை, வசனம் எழுதியது முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி.

லக்ஷ்மியின் மறைவு 1987ம் வருஷம் ஜனவரி மாதம் ஏழாம் தேதி சென்னையில். அவரது மறைவு குறித்து ஆனந்த விகடனில் (25-1-1987 – மீள் பதிப்பு ஆ.வி.11-3-2009) பட்டம்மாள் வாசன் நினைவு கூர்வது:

வாழ்க்கையில் நிறையச் சிரமப்பட்டிருந்தாலும், அவ பேசறப்போ சிரிச்சுண்டேதான் பேசுவா. சாகித்ய அகாடமி பரிசு வாங்கியதும் என்னைத் தேடி வந்து சொன்னது எனக்குப் பெருமையா இருந்தது. சமீபத்திலே எங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்திருந்தபோது 'என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போறேன்' என்று ரொம்ப சந்தோஷமாச் சொன்னாள். அவ சாகும்போது, அந்த ஒரே பிள்ளையும் துரதிர்ஷ்டவசமா கிட்டக்க இல்லாம எங்கேயோ இங்கிலாந்திலேயா இருக்கணும்னு நினைச்ச போது என் மனசுக்கு கஷ்டமாயிருந்தது."

சொல்லும்போதே திருமதி பட்டம்மாள் வாசனின் குரல் தழுதழுத்துக் கண்கள் பனித்தன.

லக்ஷ்மியின் படைப்புகள் வருமாறு:

அழகின் ஆராதனை — அவள் தாயாகிறாள் — அசோகமரம்

பூக்கவில்லை — அடுத்த வீடு — **அரக்கு மாளிகை** — அதிசய ராகம் — அத்தை — அவளுக்கென்று ஒரு இடம் — அவள் ஒரு தென்றல் — இரண்டாவது மலர் — இவளா என் மகள் — இரண்டு பெண்கள் — இரண்டாவது தேனிலவு — இனிய உணர்வே என்னைக் கொல்லாதே — இருளில் தொலைந்த உண்மை – இன்றும் நாளையும் – உறவுகள் பிரிவதில்லை — உயர்வு — உறவின் குரல் — ஊன்றுகோல் — என் வீடு — என் மனைவி — **ஒரு காவிரியைப் போல (சாகித்திய அகாதெமி பரிசு 1984)** — ஒரு சிவப்பு பச்சையாகிறது

கடைசி வரை — கங்கையும் வந்தாள் — கதவு திறந்தால் — கதாசிரியையின் கதை (இரண்டு பாகங்கள்) — கழுத்தில் விழுந்த மாலை — கணவன் அமைவதெல்லாம் — காஷ்மீர் கத்தி — காளியின் கண்கள் — கூறாமல் சன்னியாசம் — கூண்டுக்குள்ளே ஒரு பைங்கிளி — கை மாறிய போது — கோடை மேகங்கள் — சசியின் கடிதங்கள் — திரும்பிப் பார்த்தால் — துணை — தை பிறக்கட்டும் — தோட்டத்து வீடு — நதி மூலம் — நல்லதோர் வீணை — **நாயக்கர் மக்கள்** — நிற்க நேரமில்லை – நியாயங்கள் மாறும்போது — நிகழ்ந்த கதைகள் — நீலப்புடைவை — நீதிக்குக் கைகள் நீளம் — பண்ணையார் மகள் – பவளமல்லி — **பவானி (முதல் நாவல்)** — புனிதா ஒரு புதிர் — புதை மணல் — பெயர் சொல்ல மாட்டேன் — **பெண் மனம் (தமிழ் நாடு அரசு பரிசு)** — பெண்ணின் பரிசு — மரகதம் — மனம் ஒரு ரங்க ராட்டினம் — மண் குதிரை — மருமகள் — மறுபடியுமா? — மாயமான் — மீண்டும் வசந்தம் – மீண்டும் ஒரு சீதை — மீண்டும் பிறந்தால் — மீண்டும் பெண் மனம் – முருகன் சிரித்தான் — மோகத்திரை

ராதாவின் திருமணம் — ராம ராஜ்யம் — ரோஜா வைரம் — வனிதா — வசந்திக்கு வந்த ஆசை — வடக்கே ஒரு சந்திப்பு — வாழ நினைத்தால் — வீரத்தேவன் கோட்டை — வெளிச்சம் வந்தது — ஜெயந்தி வந்தாள் — **ஸ்ரீமதி மைதிலி**

தகவல் ஆதாரம்:
1. தமிழ் இலக்கிய வரலாறு – மது.ச.விமலானந்தம்
2. லக்ஷ்மியின் கதாசிரியையின் கதை – பூங்கொடிப் பதிப்பகம் 1985

3. ஆனந்த விகடன் கட்டுரை (11-3-2009)
4. வலைத்தளக் கட்டுரைகள்

காணொளிகள்

01] தகுந்த தண்டனையா? | எழுத்தாளர்: லட்சுமி
https://www.youtube.com/watch?v=Acm5TRepfFM [17:23]

02] லக்ஷ்மி அவர்களின்-கங்கையும் வந்தாள்/குடும்ப நாவல்/பகுதி-1
https://www.youtube.com/watch?v=xCk4xdrCQOo [57:58]

03] லக்ஷ்மி அவர்களின்-அழகு என்னும் தெய்வம்/குடும்ப நாவல்
https://www.youtube.com/watch?v=ORHSypal6-o04[47:09]

04] லக்ஷ்மி அவர்களின்-குருவிக்கூடு/குடும்ப நாவல்
https://www.youtube.com/watch?v=y3I9WxzgS88 [1:16:58]









(😊)(😊) இலட்சுமி (😊)(😊)